www.tamilarangam.net


# களத்தில்

அன்பளிப்பு 40P

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 14-10-1994


## வீதியோர மரங்களைப் பாதுகாக்க மக்கள் ஒத்துழைப்புக்குக் கோரிக்கை

சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன், வீதியோரங்களில் நாட்டப்படும் மரக் கன்றுகளைப் பாதுகாத்து, பராமரிக்க ஒத்துழைப்புத் தருமாறு, தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனத்தினர், பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். இன்று யாழ். மாவட்டத்தில் பெரும ளவு மரங்கள் விறகுக்காகத் தறிக்கப்படுவதனால், குடாநாட்டில் சூழல் ( தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

### உள்ளே... உள்ளே...


சிறுகதை : பாதுகாப்பு - பக்கம் 11

தேசியத் தலைவரின் வழிகாட்டலில் புதிய பரிமாணம் பெறும் கடற்புலிகள் - பக்கம் 14

இரு தரப்பு பேச்சுவார்த்தை - பக்கம் 10

சந்திரிகாவின் முதல் ஒரு மாதகால ஆட்சியும் இனப்பிரச்சினைக்கான தீர்வும் - பக்கம் 6

புலிகளின் தரப்பில் பிரதிநிதிகள் நியமனம் தலைவர் பிரபாகரன் சந்திரிகாவிற்கு கடிதம் - பக்கம் 3

இந்திய - சிறீலங்கா ஒப்பந்த அமுலாக்கம் முதலில் பின்வாங்கியது சிறீலங்கா அரசே! - டிக்சிற - பக்கம் 7


# அரசியல் தீர்வுக்கு சிங்கள அரசின் உறுதியான முடிவுகளே தேவை

**- கலாநிதி அன்ரன் பாலசிங்கம்**

"தமிழீழக் கோரிக்கை தொடர் பாக, அரசாங்கம் எங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்த முடி யாது என்பது வெளிப்படையா னது. ஆனால், தமிழீழத்துக்கு கணிசமானளவு மாற்றான திட் டத்தை பரிசீலிக்க, நாம் தயா ராயிருக்கின்றோம். சுயநிர்ணய உரிமைக்கான எமது கோரிக் கையை நாம் கைவிடுகின்றோம், என்பது இதன் அர்த்தமல்ல" என்று தமிழீழ விடுதலைப் புலி கள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகரான கலாநிதி அன் ரன் பாலசிங்கம் அண்மையில், யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய் திருந்த வெளிநாட்டுப் பத்திரி கையாளரிடம் தெரிவித்திருக்கின் றார்.

"அரசியல் தீர்வொன்றை வகுப் பதற்காக, பேச்சுவார்த்தை நடத் துவதற்கு புலிகளும், அரசாங் கமும் முன்வரவேண்டிய தரு ணம் வந்துவிட்டது. ஏற்கனவே, எமக்கு இருப்பதைவிட கூடுத லானதையே நாம் பெறக்கூடிய தாக இருக்கவேண்டும். கெளர வத்துடனும், சமாதானத்துடனும் வாழ்க்கையை நடத்தக்கூடிய தாக அரசியல் உரிமைகளுடன், எமது தாயகத்துக்கு சுயாட்சி கிடைக்கவேண்டுமென்பதே எமது நோக்கமாகும். எமது மக் களுக்கு கணிசமானளவு சுயாட்சி கிடைக்க வேண்டும். எமது மக்களுக்கு கணிசமான ளவு சுயாட்சி அமைப்பொன் றைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதில், நாம் நம்பிக்கைகொ ண்டுள்ளோம்" என்றும் கலாநிதி பாலசிங்கம் தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்துடன் புலிகள் பேச்சுவார்த்தை நடத்த முன்வந் தமைக்கான காரணங்களை, வெளிநாட்டுப் பத்திரிகையாளர் களிடம் விளக்கிக் கூறிய கலா நிதி பாலசிங்கம் மேலும் தெரி வித்ததாவது:

"இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கையின் வாயிலாக, எமக்கு அளிக்கப்பட்ட அதிகாரக் கட்டமைப்பு போதியதாக இல் லாததன் காரணத்தினாலேயே, அதனை நாம் எதிர்த்தோம். வடக்கு -கிழக்கு, தமிழ்பேசும் மக்களின் வரலாற்று ரீதியான தாயகம் என்பது உடன்படிக்கை யில் பூடகமாகத் தெரவிக்கப்பட் டிருந்தபோதிலும், இரு மாகா ணங்களினதும் நிரந்தர இணைப் புக்கு அது வழிவகுக்கவில்லை. கிழக்கில், சர்வஜன வாக்கெடுப் புக்கான ஏற்பாடும் அதில் தெரி விக்கப்பட்டிருந்தது.

### சர்வதேச அங்கீகாரம்

நாம் இப்போது அனுபவிக்கும் உரிமைகளுக்கு, சர்வதேச அங் கீகாரத்தையே நாடி நிற்கின் றோம். சுதந்திர அரசொன்று போல் தோன்றும் நிர்வாகம் ஒன்றை, இப்போது நாம் இங்கு நடத்தலாம். ஆனால் இலங்கை, இந்தியா மற்றும் ஏனைய உலக நாடுகளின் அங் கீகாரம், எமக்கு முக்கியமான தாகும். ஒரு அரசியல் தீர்வு ஏற் படுமானால், அரசியலமைப்பு

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

# தமிழ் மக்களையும் புலிகளையும் பிரித்துப் பார்க்க முடியாது

## யாழ். ஆயர் பிரதமரிடம் தெரிவிப்பு

"தமிழ் மக்கள் தமது நீதிக் கான போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் இவ்வேளை யில், விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் ஒன்றே. அவர் கள் இருவரையும் ஒருவரிடத்தில் இருந்து பிரித்துப் பார்க்க முடி யாது". இவ்வாறு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர் கள் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காப் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா வடபகுதியில், புலிகளை மக்கள் ஆதரிக்கின் றார்களா என்று கேட்டதற்கே ஆயர் இவ்வாறு பதிலளித்தார்.

அண்மையில், ஆயர் சங்க மாநாட்டிற்குச் சென்ற யாழ்ப்பா ணம், மன்னார் ஆயர்களை, சிறீலங்காவின் புதிய பிரதமர் சந்தித்து உரையாடியபோதே, இவ்வாறு தெரிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

"இதேவேளை, பெளத்த பேரி னவாதிகள் என்று ஒரு சிறு பகு தியினரே இன்று காணப்படுகின் றனர். அவர்கள் தமது சொந்த இலாபத்திற்காகவே செயற்படு கின்றனர். எம்மத்தியில் இருந்த ஒருசில இனவாதிகளையும் நாம் தூக்கிவீசிவிட்டோம். சிங்கள மக்களின் பெரும்பான்மையினர், இனவாதத்தை ஆதரிக்க வில்லை. தமிழர் பிரச்சினையை சமாதான வழியில் தீர்க்கவேண் டும் என ஆவல்படுகின்றனர்".

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

## பிறரின் தலையீடில்லாத நேரடிப் பேச்சுவார்த்தை

### □ விடுதலைப்புலிகள் உறுதியான கருத்து

பிறரின் தலையீடில்லாத, நேரடிப் பேச்சுவார்த்தையே சிறீலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறவேண்டும் என, தாம் உறுதியாக விரும்புவதாக யாழ்ப் பாணத்தில் விடுதலைப் புலிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். தமிழீழம் எங்கும் கொண்டாடப் பட்ட தியாகி திலீபன் நினைவு தினக் கூட்டங்களில் பேசிய, விடுதலைப் புலிகளின் பேச்சா ளர்கள், இக்கருத்தை ஆணித் தரமாக வலியுறுத்தியுள்ளனர். பிறசக்திகளின் தலையீடுகள் எதுவும் இல்லாத, நேரடியான பேச்சுவார்த்தையே பிரச்சி னைக்கு உண்மையான தீர்வை முன்னெடுக்க உதவும் என்று, விடுதலைப்புலிகளின் பேச்சாளர் கள் மேலும் எடுத்து விளக்கியுள் ளனர்.

### ஆரம்ப ஏற்பாடுகள்

இதற்கிடையே பேச்சுவார்த்தைக் கான ஏற்பாடுகள் தொடர்பான முதற்கட்டச் சுற்றுப் பேச்சுக்கள், விடுதலைப் புலிகளுக்கும் சிறீ லங்கா அரசாங்கத்திற்கும் இடையே அக்டோபர் 13 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடை பெறும் என எதிர்பார்க்கப்படுகின் றது.

இப்பேச்சுக்களின் போது, விடு தலைப் புலிகளின் அமைப்பின் அரசியற்றுறை துணைப் பொறுப் பாளர் கே. கரிகாலன், யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, தமிழீழ பொரு ண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ஆ. ரவி, தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் ச. டொமினிக் ஆகியோர் விடு தலைப் புலிகளின் சார்பில்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

## அச்சுவேலியில் பொதுமக்கள் உயிரிழப்பு விடுதலைப் புலிகள் பலத்த கண்டனம்

பலாலி இராணுவ முகாமிலி ருந்து விமானப்படையினரின் துணையுடன், பெருந்தொகை ஆளணி எண்ணிக்கையான சிறீலங்காத் துருப்புக்கள், அச் சுவேலி நோக்கி முன்னேற முயன்றவேளை, விடுதலைப் புலிகளுடன் சண்டை மூண்டது.

அரைமணி நேரம் நடைபெற்ற கடும் மோதலில், சிறீலங்காப் படையினரில் 4 பேர் அழிக்கப் பட்டதுடன், 8 பேர் படுகாயம டைந்து, பின்வாங்கிச் சென்ற னர். இந்த தற்பாதுகாப்பு யுத்தத் தில், விடுதலைப் புலிகள் நால் வர் வீரமரணமெய்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தை அடுத்து, சிறீ லங்கா விமானப்படை உலங்கு

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

### சிறப்புச் செய்தி

2 ஆம் பக்கத்தில்

## ஐ.நா.பொதுச்சபையில் விடுதலைப் புலிகளின் செயலுக்கு வரவேற்பு

ஐக்கியநாடுகள் பொதுச்சபை யின் 49 ஆவது கூட்டத்தொட ரில் விடுதலைப் புலிகள், யுத்தக் கைதிகளாக இருந்த சிங்களப் பொலிசாரை விடுதலை செய்த மைக்கு, பலத்த வரவேற்புக் கிடைத்துள்ளது.

சிறீலங்காவின் வெளியுறவு அமைச்சர், லக்ஸ்மன் கதிர்கா மர் ஐக்கிய நாடுகள் பொதுச்ச பையில் உரையாற்றும் பொழுது, யுத்தக் கைதிகளாக இருந்த 10 பொலிசாரை விடுதலைப் புலி கள், சிறீலங்கா அரசு பொரு ளாதாரத்தடையில் சிலவற்றை நீக்கியதற்குப் பதில் நடவடிக் கையாக, விடுதலை செய்த மையை, "சமாதானம் தோன்று வதற்கான ஒரு சைகை" என வர்ணித்தார். மக்களால் வழங் கப்பட்ட ஆணையின்படி நாட் டில், வடக்கு -கிழக்குப் பிரச்சி னைக்கு ஒரு முடிவைக்கொண் டுவர, இந்த அரசாங்கம் உறு திபூண்டுள்ளது" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# புதிய நம்பிக்கை

திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் அரசு இனப்பிரச்சினை தொடர்பாக புதிய அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளதை, தமிழீழ மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர்.

புதிய அரசு ஆட்சிபீடமேறியதும், சிறீலங்கா அரசில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தை, சர்வதேச நாடுகளும் பாராட்டியிருப்பதுடன், சந்திரிகா அம்மையாரின் சமாதான முயற்சிகளை வரவேற்றுமுள்ளன.

முன்னைய அரசால் தடைசெய்யப்பட்ட சில பொருட்கள் மீதான தடையை புதிய அரசு நீக்கியதும், அதற்குப் பதில் நடவடிக்கையாக, காவலில் வைக்கப்பட்டிருந்த 10 சிங்களப் பொலிசாரை விடுவிக்கும்படி ஆணையிட்ட தலைவர் பிரபாகரன் அவர்கள், சந்திரிகா அம்மையாரின் முயற்சிகளைப் பாராட்டியிருப்பதுடன், போர்நிறுத்தத்தின் அடிப்படையில், சமாதானப் பேச்சுக்களைத் தொடங்க, புதிய அரசு உகந்த சூழலை உருவாக்கவேண்டும் என்றும் சந்திரிகா அரசுக்கு நேசக்கரம் நீட்டியுள்ளார்.

இதேவேளை, பேச்சுவார்த்தைகள் மூலம் - அமைதி வழியில் இனப்பிரச்சினையைத் தீர்க்க முயலும்படி, கடந்த நான்கு வருட காலமாக புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்து வந்திருப்பதும், அதற்கான சூழலை உருவாக்கும் முன்முயற்சிகளில், ஒருதலைப்பட்சமாக, ஈடுபட்டு வந்தமையும் இங்கு நினைவுகூரத்தக்கது.

சிங்கள தேசத்திலிருந்தும் - சர்வதேச சமூகத்திலிருந்தும் - யாழ்ப்பாணம் வந்து, புலிகளின் தலைமையைச் சந்தித்த அனைத்து நல்லெண்ணக் குழுக்களும், புலிகளின் சமாதான விருப்பையும் -அதைச் செயற்படுத்தத் தயாரான புலிகளின் நிலைப்பாட்டையும் -உலகிற்குத் தெளிவாகவே அறிவித்திருந்ததும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

சமாதானம் தொடர்பாக வார்த்தைகளுடன் மட்டும் நின்றுவிடாமல், (முன்னைய) அரசுக்குப் பல நல்லெண்ண சமிக்ஞைகளையும் புலிகளின் தலைமை காட்டியதையும் எவரும் மறுக்கமுடியாது. இத்தகைய நல்லெண்ண முயற்சியாக பல்வேறு சந்தர்ப்பங்களில் - பல்வேறு சமாதானத் தூதர்களூடாக -பல போர்க் கைதிகளை விடுதலை செய்து, புலிகள் காட்டிய நல்லெண்ண சமிக்ஞைகளை, முன்னைய அரசு பொருட்படுத்தாது இருந்ததும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

இவ்விதம் சமாதான வழிமுறைகள் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்று, கடந்த நான்கு வருட காலமாகப் புலிகள் கடைப்பிடித்துவரும் அரசியல் நிலைப்பாட்டில், என்றும் குழப்பம் இருந்ததில்லை.

இன்று, திருமதி சந்திரிகா தலைமையிலான புதிய அரசு, சமாதான வழிமுறைகள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலப்போவதாக அறிவித்து -நடவடிக்கைகளையும் எடுக்கத் தொடங்கியிருப்பது, உண்மையில் ஒரு நல்ல அறிகுறியாகவே தென்படுகின்றது.

ஆகவே, முன்னைய அரசு தமிழ்மக்கள் மீது சுமத்திய அனைத்துப் பளுக்களையும் முதலில் அகற்றிவிட்டு, சரியான இடத்திலிருந்து பேச்சுக்களைத் தொடங்கி, யதார்த்தமான வழிமுறைகளூடாக அது நகர்த்தப்படும்போது, இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வொன்று தென்பட வாய்ப்புக்கள் உண்டு.

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரையில், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பூர்வாங்கத்திட்டத்தை இரு செயற்பாட்டுத் திட்டங்களாக வகுத்து, ஒன்றன்பின் ஒன்றாக அவற்றை நடைமுறைப்படுத்துவதே சிறந்தது என்று கருதுகின்றது.

அதாவது அன்றாடப் பிரச்சினைகள், அடிப்படைப் பிரச்சினைகள் என இரு பகுதிகளாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை வகுத்து, அவற்றிற்குத் தீர்வுகாண முனைவது, தற்போதைய யதார்த்த சூழலில் மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

கடந்த நான்கு வருடப் போரின் விளைவாக தமிழ் மக்கள் அனுபவித்துவரும் அன்றாடப் பிரச்சினைகளை இனம்கண்டு அதைத் தீர்த்துவைப்பதற்கு, புதிய அரசு முதலில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஏனெனில், இந்த நான்காண்டுப் போர் தமிழ் மக்களின் அன்றாட வாழ்வில், ஏகப்பட்ட பிரச்சினைகளை ஏற்படுத்திவிட்டது. பொருளாதாரப் பிரச்சினை, போக்குவரத்துப் பிரச்சினை, அகதிப்பிரச்சினை மற்றும் அடிப்படைத் தேவைகளை அடைய முடியாமை. . என்று பல பிரச்சினைகளால் மக்கள் அல்லலுறுகின்றனர்.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை ஒரு மனிதாபிமான பிரச்சினையாகப் பார்த்து, அவற்றிற்கு முதலில் பரிகாரம் காணப்படும்போது, புதிய அரசுமீது மக்கள் நம்பிக்கைகொள்வதுடன், சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதற்கான ஒரு நல்ல சூழலையும் அது உருவாக்கிவிடும்; அத்துடன் இருபகுதியினர்க்குமிடையில் பரஸ்பர நம்பிக்கையையும் -விட்டுக்கொடுப்புக்களையும் - ஏற்படுத்தி, ஒரு நிரந்தர சமாதானத்தை உருவாக்கவும் அது உதவும்.

அத்துடன் தமிழினத்தின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கக்கூடிய முழு அதிகாரமும் தற்போதைய அரசிடம் இல்லாதிருக்கின்ற யதார்த்தத்தையும் கருத்திற்கொண்டே, பிரச்சினையை இரு பரிமாணங்களில் அணுகித் தீர்வுகாணவேண்டும் என்று கூறுகின்றோம்.

ஆகவே, முதலில் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

இதேவேளை தமிழினத்தின் அடிப்படைப் பிரச்சினைகளாக தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என்பன விளங்குகின்றன. 1985 ஆம் ஆண்டில் நடந்த திம்பு மாநாட்டிலிருந்து இந்த அடிப்படைக் கோரிக்கைகளையே தமிழினம் வலியுறுத்தி வருகின்றது.

இந்த அடிப்படைக் கோரிக்கைகளுக்கு ஒரு நியாயமான தீர்வுத்திட்டத்தை வைத்தால்தான், நிரந்தரத்தீர்வு ஏற்பட வாய்ப்புகள் ஏற்படும். இதற்கு சந்திரிகா அம்மையாரின் அரசு தயாரா என்பது, இன்றைய கேள்வி. அப்படித்தான் அவர் துணிந்து ஒரு முடிவுக்கு வந்தாலும், அதை நடைமுறைப்படுத்த சிங்களப் பேரினவாதம் இடங்கொடுக்குமா என்பதும் ஒரு முக்கிய கேள்வியாக உள்ளது. ■

# தப்பான கணிப்பு

அண்மையில் பி.பி.சியில் ஒலிபரப்பான செவ்வியில், இனப்பிரச்சினையில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு உட்பட, பல்வேறு விடயங்களுக்கும் தெளிவான பதிலை தலைவர் பிரபாகரன் அளித்துள்ளார். இந்தவகையில், இனி எவரும் இனப்பிரச்சினையில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்த சந்தேகமோ, ஐயமோ கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்றே கூறலாம்.

இச்செவ்வியில், இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்று காணப்படுவதற்கு, விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கின்றது என்பது தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு, பேச்சுவார்த்தை ஒன்று நடத்தப்பட்டு, அது வெற்றியளிக்க வேண்டுமானால், போர் நிறுத்தம் ஒன்று அவசியம் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இப்போர் நிறுத்தமானது ஒரு நிபந்தனையல்ல என்பதையும் தலைவர் பிரபாகரன் தெளிவாக விளக்கியுள்ளார். சமாதானப் பேச்சிற்கான ஒரு சமாதான சூழ்நிலை அவசியமென்ற அவரது நிலைப்பாடானது, யதார்த்தத்தின் பாற்பட்டது. ஒருபுறம் போர், மறுபுறம் சமாதானப் பேச்சுக்கள் என்பது, உண்மையான சமாதானம் நோக்கி இட்டுச்செல்லாது என்பதோடு, இவ்வகையில் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதற்கான ஒன்றாகவே இருக்கும் என்பதிலும் ஐயமில்லை.

இதேவேளை யுத்த நிறுத்தம் என்பது, பலவீனப்பட்டுள்ள புலிகளைப் பலப்படுத்திவிடும் என்ற இராணுவத் தரப்புவாதமானது ஏற்புடையது அல்ல என்பதையும், விடுதலைப் புலிகளின் போர் யுக்திக்கு முரணானது என்பதையும் தலைவர் பிரபாகரன் தெளிவுபடுத்தியுள்ளார். "இராணுவரீதியில் போர் நிறுத்தம் எமக்குச் சாதகமானதல்ல; எதிரியின் ஆயுதங்களைப் பறிப்பதிலும், அழிப்பதிலும் தான் எமது வளர்ச்சியும் பலமும் தங்கியுள்ளது. போர் நடவடிக்கையின் மூலமே இது சாத்தியமாகின்றது' என்ற தலைவர் பிரபாகரனின் கூற்றானது, கடந்தகால வரலாற்றின் வெளிப்பாடே ஆகும்.

எடுத்துக்காட்டாக 1991 இல் ஆனையிறவுச் சமர் ஆ.க.வெ. -நடவடிக்கை முடிந்தவேளை, "விடுதலைப் புலிகள் இயக்கம் பெரிதும் பலவீனப்பட்டுப்போய்விட்டது; போராடும் சக்தியை இழந்துவிட்டது" என்றே சிறீலங்கா இராணுவத்தரப்பு, மற்றும் சிங்கள இராணுவ விமர்சகர்களும் தெரிவித்தனர். இதனால், அதற்குப்பிற்பட்ட காலத்தில் யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்யவும் மறுத்தனர்.

ஆனால், நடந்தவையெல்லாம் தலைகீழான மாற்றத்துடன் கூடியவை. இச்சமரின் பின்னரே, சிறீலங்கா இராணுவத்திற்கு உயிர் மற்றும் உடைமைகளில் பாரிய சேதங்களை ஏற்படுத்திய தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர். கட்டைக்காடு மினிமுகாம் தகர்ப்பு, மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பு, யாழ்தேவி இராணுவ நடவடிக்கை முறியடிப்பு, பூநகரிக் கூட்டுப்படைத்தளம்மீதான தாக்குதல் என்பனவற்றோடு, கடற்புலிகளும் பெரும் சாதனை படைத்தது இக்காலகட்டத்தின் பின்புதான்.

இந்நிலையில் யுத்த நிறுத்தம் என்பது, புலிகளைப் பலப்படுத்தும் என்ற இராணுவத்தரப்புவாதம் வரலாற்றுக்குப் புறம்பானதாகும். மறுவளமாக யுத்த நிறுத்தம், இராணுவத்தரப்பிற்கே சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கக்கூடும். கடந்த ஆண்டு பூநகரிக் கூட்டுப்படைத்தளம்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால், நிலைகுலைந்துபோன சிறீலங்கா இராணுவக் கட்டமைப்பு, இன்னமும் ஒழுங்கான முறையில் சீரமைக்கப்படவில்லை என்றே தெரிகின்றது. அவ்வாறு ஒழுங்கமைக்கப்படாமையே, அத்தாக்குதல் இடம்பெற்று பத்து மாதங்கள் கழிந்தும்கூட, இராணுவம் ஒருபெரும் தாக்குதலை நடத்தமுடியாமல் போய்விட்டது. இந்தவகையில் யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படுமானால், அதன்மூலம் கிடைக்கும் கால அவகாசம் இராணுவத்தைச் சீரமைக்கவும், ஒழுங்குபடுத்தவுமே உதவக்கூடும்.

இராணுவத்தரப்பு, யுத்த நிறுத்தம் தேவையற்றது என வற்புறுத்துவதற்கு வேறு காரணங்கள் இருக்கலாம். இதற்கு விடுதலைப் புலிகளை இராணுவரீதியில் வெற்றிகொள்ள முடியவில்லையே என்ற ஆதங்கமும், போரினால் கிட்டும் பெருமளவிலான பொருண்மியமும் முக்கியமானவையாக இருக்கலாம்.

ஆனால், இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காண்பதாகப் புறப்பட்ட அரசியல்வாதிகள், இதனை ஏற்றுக்கொண்டு, கடந்தகால வரலாற்றையும், நிகழ்கால யதார்த்தத்தையும் மறப்பதன் மூலம், சமாதானம் நோக்கி முன்னேறிவிடமுடியாது. போர் நிறுத்தம் ஏற்படாதுவிட்டால், உண்மையான சமாதான சூழ்நிலையும் சுதந்திரமான சமாதானப் பேச்சுக்களும் இடம்பெறாது என்பது வெளிப்படை. ■

சிறப்புச் செய்தி

# சிறீலங்காவின் சரக்குக் கப்பல் வெற்றிலைக்கேணியில் மூழ்கியது

**9-10-94** அன்று அதிகாலையில், சிறீலங்காவின் சரக்குக் கப்பல் ஒன்று, வெற்றிலைக்கேணி இராணுவ முகாமுக்கு அண்மையில் உள்ள கடலில் மூழ்கியுள்ளதாக அறியப்படுகின்றது.

கடற்கண்ணிக்கு இலக்காகி நீரில் மூழ்கியுள்ள போதிலும், கப்பலில் கடமையாற்றிய சகல மாலுமிகளும் காப்பாற்றப்பட்டுள்ளனர் எனவும், உயிர்ச்சேதம் எதுவுமில்லை எனவும் சிறீலங்கா கடற்படையினர் அறிவித்துள்ளதாக செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இச் சரக்குக் கப்பலை, விடுதலைப் புலிகளே தாக்கி மூழ்கடித்தனர் எனவும், அதில் இருந்த மாலுமிகள் யாவரும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாகவும், இத்தாக்குதல் சம்பவம், விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்குமிடையிலான பேச்சு வார்த்தையை எந்த வகையிலும் குழப்பாது எனவும் சிறீலங்கா அரச வட்டாரங்களை ஆதாரம் காட்டி, மற்றொரு செய்தியும் வெளிவந்துள்ளது.

இச் சரக்குக் கப்பல் சிறீலங்கா அரசுக்குச் சொந்தமானதா? அல்லது அரசினால் வாடகைக்கு அமர்த்தப்பட்டதா? என்பதிலும் முரண்பட்ட செய்திகளே வெளிவந்துள்ளன. வெற்றிலைக்கேணி இராணுவ முகாமை அண்டிய ஆழம் குறைந்த கடலில் செல்லக்கூடிய, ஒரே ஒரு கப்பல் இது எனவும் அறியப்படுகின்றது.

மேலும், இக்கப்பல் நீரில் மூழ்கிக் கொண்டிருக்கையில் அதில் இருந்த, 'ராடர்' உட்பட பெறுமதியான பொருட்கள் பலவற்றை விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்று விட்டனர் எனவும், கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால், இச் சம்பவம் தொடர்பான விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடச் செய்திகள் எதுவும் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கப் பெறவில்லை. ■

"ஒரு சுதந்திரமான, இறைமையுடைய தனியரசை அமைப்பதன் மூலமே தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஏற்படும். சுதந்திர தமிழீழமே எமது அசைக்க முடியாத அரசியல் இலட்சியம். எமது தாயகத்தை மீட்டு சுதந்திர தனியரசைப் பிரகடனப் படுத்தும் வரை நாம் தொடர்ந்து போராடியே தீருவோம்."

- தலைவர் பிரபாகரன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இனப்பிரச்சினை குறித்த ஆரம்பகட்ட பேச்சுவார்த்தை

# புலிகளின் தரப்பில் பிரதிநிதிகள் நியமனம்; தலைவர் பிரபாகரன் சந்திரிகாவிற்கு கடிதம்

## யுத்த நிறுத்தம் பற்றி குறிப்பிடாமை குறித்து கவலை

சிறீலங்கா அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, ஆரம்ப பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தமது தரப்பு பிரதிநிதிகளை நியமித்துள்ளார். இது குறித்து சிறீலங்கா பிரதம மந்திரி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்காவிற்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், மின்சார விநியோகத்தை மீள அமைக்கவும், பெருஞ்சாலைகளைத் திருத்தவும், நீர்ப்பாசனத் திட்டங்களைச் சீரமைக்கவும் அரசாங்கம் முடிவு செய்திருப்பதை வரவேற்றுள்ளதுடன், யுத்தநிறுத்தம் குறித்து அரசாங்கம் எதுவுமே குறிப்பிடாததையிட்டு கவலை தெரிவித்தும் உள்ளார்.

சிறீலங்கா பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்காவிற்கு தலைவர் பிரபாகரன் எழுதிய கடிதத்தை முழுமையாக இங்கே தருகின்றோம்.

**அன்புள்ள பிரதம மந்திரி அவர்களுக்கு,**

9, செப்டம்பர் 1994, திகதியிடப்பட்ட உங்களது கடிதம் கிடைக்கப்பெற்று மகிழ்ச்சி. எமது காவலிலிருந்த 10 காவற்றுறைக் கைதிகளை நாம் விடுதலை செய்தமை, எமது நல்லெண்ணத்தைக் காட்டுவதாக நீங்கள் வரவேற்றுள்ளீர்கள். அதையிட்டு மகிழ்வடைகிறோம்.

பொருளாதாரத்தடை நீக்கம் செய்யப்பட்ட பொருட்கள், யாழ்ப்பாண மக்களுக்கு உடனடியாகக் கிடைக்க வேண்டுமென நீங்கள் விரும்புவதை நாம் வரவேற்கிறோம். இந்த விடயத்தில் நாமும் அதே அக்கறையுடையவர்களாகவே இருக்கிறோம். மிகவும் அவசரமான இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண விளையும் உங்களது முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

மின்சார விநியோகத்தை மீள அமைக்கவும், பெருஞ்சாலைகளைத் திருத்தவும், நீர்ப்பாசனத் திட்டங்களைச் சீரமைக்கவும் உங்களது அரசாங்கம் முடிவு செய்திருப்பதை நாம் வரவேற்கிறோம். இந்த சீரமைப்பு வேலைகளில் ஈடுபடப்போகும் அரசாங்க தொழில் நுட்ப அதிகாரிகளுக்கு எமது இயக்கம் சகல ஒத்துழைப்புக்களையும் வழங்குமென உறுதி கூறுகிறோம்.

சமாதான பேச்சுகளுக்கு நாம் விடுத்த வேண்டுகோளுக்கு சாதகமான முறையில், நீங்கள் பதிலளித்திருப்பதை நாம் வரவேற்கிறோம். ஆரம்ப பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு பிரதிநிதிகளை நியமிக்குமாறு கேட்டிருந்தீர்கள். பூர்வாங்க பேச்சுக்களை நடத்துவதற்கு கீழ்க்காணும் அதிகார பூர்வமான பிரதிநிதிகளை நாம் நியமித்திருக்கிறோம். நீங்கள் குறிப்பிட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் சீரமைப்பு வேலைகள் குறித்தும் இவர்கள், உங்களது பிரதிநிதிகளுடன் பேசுவார்கள்.

நாம் நியமித்துள்ள பிரதிநிதிகளின் விபரம் வருமாறு:-

**1. திரு. கே. கரிகாலன்,**
**துணைப் பொறுப்பாளர்,**
**அரசியற்றுறை.**

**2. திரு. சி. இளம்பரிதி,**
**அரசியற் பொறுப்பாளர்,**
**யாழ். மாவட்டம்.**

**3. திரு. ஆ. ரவி,**
**பொறுப்பாளர்,**
**தமிழீழ பொருண்மிய**
**மேம்பாட்டு நிறுவனம்.**

**4. திரு. ச. டொமினிக்,**
**பொறுப்பாளர்,**
**தமிழீழ நிர்வாக சேவை.**

போர் நிறுத்தம் சம்பந்தமான எமது யோசனை பற்றி நீங்கள் உங்களது கடிதத்தில் எதுவுமே குறிப்பிடாததையிட்டு நாம் வருந்துகிறோம். சமாதானம், நல்லெண்ணம், இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் போன்றவற்றை கட்டியெழுப்பும் பணிக்கு போர் நிறுத்தமானது அத்தியாவசியம் என்பதை, நீங்கள் நன்கு அறிவீர்கள். எனவே இவ்விடயத்தில், அவசர சிரத்தைகொள்வீர்கள் என நம்புகின்றோம். ■



## தேசியத் தலைவரின்...

படகு. இந்தப் படகின் உருவாக்கம்கண்டு, பயன்படுத்திப் படகின் வடிவமைப்பிலிருந்து செலுத்தப்படும்வரை ஒன்றிணைந்துநின்று, இதற்கெனப் பெரும்நேரத்தை ஒதுக்கி, உருவாக்கத்திற்கான கருத்துக்களை வழங்கி, இதனைச் செலுத்தி, ஒரு வரலாற்று நிகழ்வைப் படைப்பதற்கு வழிகாட்டியாக நின்ற எமது தலைவரின் உருவப் படத்தினை அட்டைப்படமாகத் தாங்கி, இந்த ஒலிப்பதிவுநாடா வெளிவருகின்றது" என்றார். ■

## சந்திரிகா முதல்...

கடிதத்தில் இருந்தே புரிந்து கொள்ள முடியும். சமாதான முன் முயற்சியாக எழுதப்பட்ட அக் கடிதத்தில் இராணுவத்துடன் தொடர்புடைய எந்தவகை அம்சங்களும் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இது இராணுவத்துடன் தொடர்புடைய விடயங்களை அரசாங்கம் விரும்பியது போன்று கையாள முடியாமல் உள்ளதையே காட்டுவதாகவுள்ளது.

இந்த வகையில் பார்க்கும்போது இனப்பிரச்சினை விவகாரத்தில் இராணுவத்தின் அழுத்தத்திற்குச் சந்திரிகா அரசாங்கம் பணிந்து போய்விட்டது என்பதே உண்மையாகும். இதன் காரணமாக இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் பின்னடைவு காண்பட்டுள்ளதெனலாம்.

இந்த நிலையில் முதலாவது கட்டத்தில், பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவின் அரசாங்கம் இராணுவத்தின் எதிர்ப்பை ஒருவாறு மூடி மறைத்து ஒருபடி முன்னேறியுள்ளது என்றாலும், இராணுவத்தின் எதிர்ப்பு தொடர்ந்து இருக்குமானால் அரசின் இரண்டாம், மூன்றாம் கட்ட முன்னேற்றங்கள் பெரிதும் நெருக்கடி மிக்கதாகவே இருக்கும். ■

## இலண்டனில்...

காரணமாக அமைந்ததை இலகுவாக அவதானிக்க முடிந்தது.

சுருங்கக்கூறின் இக்கலை நிகழ்வு, "தமிழீழ விடுதலையின் தேவையினை மக்கள் மனங்களில் ஆழமாக வேரூன்றச் செய்ததோடு, எம்தேச விடுதலைக்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களின் பங்களிப்பு எந்தளவு அவசியம்" என்பதையும் வெளிப்படுத்தி நின்றது. அந்நிய நாடொன்றில் வாழ்ந்தாலும், எம் தேச விடுதலைக்கு பங்களிப்புச் செய்ய வேண்டியது, தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் தலையாய வரலாற்றுக் கடமை என்பதை, இவ்வெழுச்சிக் கானங்கள் தெளிவுற உணர்த்தியுள்ளன.

"நல்லதரமான, நிறைவான நிகழ்ச்சி; இது மேலும் தொடரப்படவேண்டும்" என பார்வையாளர் நேரிலேயே மனந்திறந்து பாராட்டிச் சென்றதோடு, நிகழ்ச்சிக்கான ஒழுங்கமைப்பினையும் பாராட்டியிருந்தனர். நிகழ்ச்சிபற்றிய மதிப்பீட்டைப் பெறுவதற்காகப் பார்வையாளர்களிடம் அபிப்பிராயப் படிவங்களும் வழங்கப்பட்டிருந்தன. இப்படிவங்களில் எழுதப்பட்ட செய்திகள் மூலமும் எழுச்சிக் கானங்களின் தரத்தை, நிறைவை அளவிட முடிந்துள்ளது. பலராலும், பல வகையிலும் பாராட்டுதலைப் பெற்ற இக்கலை நிகழ்வில், அனைத்து விடயங்களிலும் பங்களிப்புச்செய்த யாவருக்கும் கலை, பண்பாட்டுக் கழகம் மீண்டும் தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது. ■

> **"எமது போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல, எம்மக்கள் பாதுகாப்பாகவும் சுபீட்சமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கானதே".**
>
> **- தமிழீழத் தேசியத் தலைவர்**

# பிரதிநிதிகளை தெரிவு செய்யின் ஆரம்ப பேச்சுக்களை நடத்தலாம்

## தலைவர் பிரபாகரனுக்கு பிரதமர் சந்திரிகா கடிதம்



"சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருப்பதாக, நீங்கள் விடுத்த அறிக்கையை நாம் மிகவும் ஆர்வத்துடன் நோக்கினோம். இது பற்றி நாம் விபரமாக உங்களுடன் பேச விரும்புகிறோம்.

எனது பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு, நீங்களும் உங்களது பிரதிநிதிகளை நியமிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்". இவ்வாறு சிறீலங்காவின் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தலைவர் பிரபாகரனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தலைவர் பிரபாகரனுக்கு அவர் எழுதியுள்ள கடிதம் வருமாறு;

**அன்பின் பிரபாகரன் அவர்களுக்கு,**

யாழ்ப்பாணம், மற்றும் வடபகுதி மக்கள் மீது முன்னைய அரசு திணித்திருந்த பொருளாதாரத் தடையை நாம் நீக்கியுள்ளமை, எமது நல்லெண்ணத்தைக் காட்டுவதாக நீங்கள் வரவேற்றிருக்கிறீர்கள். இதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம். அத்தோடு பல ஆண்டுகளாக விடுதலைப் புலிகளின் தடுப்புக் காவலிலிருந்த 10 காவல் துறையினரை விடுதலை செய்வதற்கு நீங்கள் முடிவெடுத்ததை நாம் பெரிதும் வரவேற்கின்றோம். இது உங்களின் ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக மட்டுமன்றி, வடக்கு -கிழக்கு பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் உங்களது ஆக்கபூர்வமான நோக்கிற்கு ஒரு எடுத்துக் காட்டாகவும் அமைவதாக நாம் கருதுகிறோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருப்பதாக நீங்கள் விடுத்த அறிக்கையை, நாம் மிகவும் ஆர்வத்துடன் நோக்கினோம். இதுபற்றி நாம் விபரமாக உங்களுடன் பேச விரும்புகிறோம். எனது பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு, நீங்களும் உங்களது பிரதிநிதிகளை நியமிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தடைகள் நீக்கப்பட்ட பொருட்கள், தாமதமின்றி யாழ்ப்பாண மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம். பருத்தித்துறை ஊடாக மட்டும் இந்தப் பொருட்களை அனுப்பக்கூடியதாக இருப்பதால் எமக்குச் சிரமங்கள் உண்டு. எனவே யாழ்ப்பாண மக்களுக்கு, பொருட்கள் தாமதமின்றி கிடைக்கக்கூடிய வழிவகைகள் பற்றி பரிசீலனை செய்ய விரும்புகின்றோம்.

பொதுமக்களது வாழ்வில் இயல்பு நிலையை ஏற்படுத்தும் வகையில், விரைவாக மின்சார விநியோகத்தை மீளமைக்கவும், பெருஞ்சாலைகளைத் திருத்தவும் நீர்ப்பாசனத் திட்டங்களைச் சீரமைக்கவும் எமது அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கவும், சமாதானத்தை உண்டுபண்ணவும் எமது அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவதாக நீங்கள் உறுதி அளித்திருப்பதை நாம் வரவேற்கிறோம்.

எனவே, மேற்குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டங்களின் சீரமைப்பு வேலைகளில் ஈடுபடப் போகும் எமது தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு, சகல ஒத்துழைப்பையும் வழங்குவீர்களென நாம் எதிர்பார்க்கிறோம்.

ஆரம்ப பேச்சுக்களை நடத்துவதற்காக நாம் நியமிக்கப்போகும் பிரதிநிதிகள், இவ்விடயம் சம்பந்தமான நடைமுறைப் பிரச்சினைகள் குறித்தும் பேச்சுக்களை நடத்தலாம் என கருதுகிறோம். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கண்டல் காடு அழித்தவரிடம் தண்டப்பணம் அறவீடு

- பருத்தித்துறை நீதிமன்று விதிப்பு

சட்டத்தை மீறி கண்டல் காடுகளை வெட்டிய இருவருக்கு, பருத்தித்துறை நீதிமன்றம் தண்டப்பணம் அறவிட்டதோடு, அவர்கள் கொண்டுவந்த விறகையும் பறிமுதல் செய்தது.

அண்மையில் கம்பர்மலை, கரணவாய் தெற்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவர், கப்புதூ பகுதியில் கண்டற் காட்டழிப்பில் ஈடுபட்டிருந்தபோது, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன, சூழல் பாதுகாப்புப் பகுதி, விசேட கண்காணிப்பாளரால் பிடிக்கப்பட்டு, காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களை காவல் துறையினர் நீதிமன்றின் முன் ஆஜர் செய்ததைத் தொடர்ந்து, குற்றத்தை ஒப்புக்கொண்ட இவர்களுக்கு, தலா 100 ரூபா வீதம் தண்டப்பணம் அறவிடப்பட்டது.

1993 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க தமிழீழ சட்டக் கோவையின்படி, கண்டல்காடுகள் விறகுக்காக வெட்டப்படுவது, 01. 04. 1994 ஆம் திகதி தொடக்கம் தடை செய்யப்படுவதாகவும், இதனை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. ■

# வன்னிப் பிரதேசத்தில் மாணவர் எழுச்சிப்பாசறை

விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பினரால், மாணவர் எழுச்சிப் பாசறை வன்னி மாவட்டத்தில், விசுவமடு என்னுமிடத்தில் 01. 09. 1994 ஆம் நாள் தொடக்கம் 04. 09. 19-94 ஆம் நாள்வரை நடாத்தப்பட்டது.

இவ்வெழுச்சிப் பாசறையில், வன்னி மாவட்டத்தில் இருந்து 80 மாணவர்களும் யாழ், மன்னார், முல்லை மாவட்டங்களிருந்து தலா 10 மாணவர்களும் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் தனியாளுமையை விருத்திசெய்யவும், மாணவர்கள் சமூகத்துக்கு உரியவர்களாக மாற்றப்படவும், சொந்தக்காலில் நின்று செயற்படவும் ஏதுவாக, இப்பாசறை நிகழ்வுகள் அமைந்தன. மாணவர்கள் ஆர்வத்துடன், செயற்பட்டதை இறுதிநாள் நிகழ்வுகள் வெளிக்காட்டக்கூடியதாக இருந்தன.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் சகல கோட்ட, மாவட்ட, தமிழீழப் பொறுப்பாளர்களும் இப்பாசறையில் கலந்துகொண்டனர். இப்பாசறை தொடர்ந்து மாவட்டரீதியாக நடாத்தப்படவிருக்கின்றது.

மாணவர் எழுச்சிப் பாசறையின் ஆரம்ப நிகழ்வில், தமிழீழ அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன், கிளை நடுவப்பணியகப் பொறுப்பாளர் திரு. எழிலரசன், வன்னி - முல்லை -மன்னார் மாவட்ட தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. நாவண்ணன், வன்னி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. ஞானம், வன்னி மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. செல்வம், வன்னி மாவட்ட அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் திரு. ஜெனி, கிளி. கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. பரணிதரன், விடுதலைப் புலிகள் மகளிர் அணியினர், கண்டாவளைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. குருகுலராஜா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொன் சபாபதி ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். ■

# பொருண்மிய கண்காட்சிக்கு பெருந்தொகையான மக்கள் வருகை

நல்லூரில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடாத்தப்பட்ட கண்காட்சியினைக் காண்பதற்கு, தினந்தோறும் பெருமளவு மக்கள் கூடியுள்ளனர்.

தமிழீழ தேசத்தின் தன்னிறைவு பொருண்மிய வளர்ச்சியில் நம்பிக்கையூட்டுவதாக அமைந்த இக்கண்காட்சியில், பல பகுதிகளாக தமிழீழத்தின் கட்டுமானம் சித்தரிக்கப்பட்டிருந்தது.

விவசாயம், கடல்வளம், விலங்கு வேளாண்மை கைத்தொழில், உட்கட்டுமானம், சக்தி, உணவு பதனிடல், கிராமிய உற்பத்திக் குழு, பனை -தென்னைவள அபிவிருத்தி, வர்த்தகம் என பகுதிரீதியாக எதிர்கால தமிழீழத்தின் சுபீட்சத்தை, விளக்கப்படங்கள் மூலமும், மாதிரிகள், பொறிகள் மூலமும் உருவாக்கி, மக்களுக்கு புள்ளிவிபரங்களுடன் விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன், மாலை நேரங்களில் பொருண்மிய மேம்பாடு குறித்த கலை நிகழ்வுகளும், நாள்தோறும் நடைபெற்று வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. ■

# 1200 விவசாயிகளுக்கு நெற்செய்கை கடன் வழங்கல்

யாழ். மாவட்டத்தில் 1994/19-95 காலபோகத்தில், நெற்செய்கையை மேற்கொள்ளவிருக்கும் 1200 விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்கான நடவடிக்கையினை, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

நெற்செய்கையை மேம்படுத்துமுகமாக, கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக வழங்கப்படும் இக்கடன்கள் மூலம் விவசாயிகள் பெரிதும் நன்மையடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. ■

# கூட்டுறவு நிறுவனங்களில் திடீர் கணக்குச் சோதனை

தமிழீழ நிர்வாகசேவைப் பகுதியினர், கூட்டுறவு நிறுவனங்களைத் திடீர்க் கணக்காய்வுக்கு உட்படுத்திவருகின்றனர்.

தமிழீழ நிர்வாக சேவைப் பகுதியினரின், கணக்காய்வுப் பிரிவினர் அண்மையில், வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் சகல நடவடிக்கைகளையும் திடீரெனக் கணக்காய்வு செய்ய ஆரம்பித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

தமிழீழ நிர்வாக சேவைப் பகுதியினரால், எந்தக் கூட்டுறவு நிறுவனத்திலும் எந்த நேரத்திலும் திடீரெனக் கணக்காய்வு மேற்கொள்ளப்படலாம் என மேலும் தெரியவருகின்றது. ■

# பெருமளவு மருத்துவ நூல்கள் இங்கும் வெளிவரவேண்டும்

- அரசியற் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

"தமிழ் நாட்டைப்போன்று பெருமளவு மருத்துவநூல்கள் யாழ்ப்பாணத்திலும் வெளிவரவேண்டும்". இவ்வாறு டாக்டர் எஸ். பி. ஆர். சீர்மாறன் எழுதிய, 'சில நோய்களும், சில ஆலோசனைகளும்' என்ற மருத்துவநூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு, முதற்பிரதியைப் பெற்றுக்கொண்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "இன்று எவ்வளவோ நெருக்கடிகளின் மத்தியில், இங்குள்ள மருத்துவர்கள் தமது சேவையை ஆற்றிவருகின்றார்கள். இவர்களது சேவையைப் பாராட்டுகின்றோம். தமிழ் நாட்டில் பெருமளவு மருத்துவநூல்கள் வெளிவந்துள்ளன. அதைப் போன்று, இங்கும் மருத்துவநூல்கள் வெளிவரவேண்டும். இதன் முதல்படியாக டாக்டர் சீர்மாறன் எழுதிய இந்த மருத்துவநூல் வெளிவந்துள்ளது. மற்றவர்களும் எழுதவேண்டும். தொடர்ந்தும் இதுபோன்ற நூல்கள் வெளிவரவேண்டும். இதற்கு எம்மால் ஆன உதவிகளை நாம் வழங்குவோம்" எனவும் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் எஸ். வி. பரமேஸ்வரன் அவர்களின் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரட்னம் அவர்கள் நூலை வெளியிட்டுவைக்க, தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார். ■

# கட்டாக்காலி எருதுகள் உழவுக்குப் பயிற்சி

முல்லை மாவட்டம் முத்தையன் கட்டுப்பகுதியில், கட்டாக்காலி மாடுகளை உழவுக்குப் பயன்படுத்தும் செயற்பாட்டில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

கட்டாக்காலிகளாக பயிர்களை நாசம் செய்யும் எருமை மாடுகளைப் பிடித்க, பண்ணையில் வைத்து, உழவு பழக்கி, விவசாயச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கிலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது.

இதன்கீழ், முத்தையன்கட்டுப் பண்ணையில் தற்போது 50 எருமைகளுக்கு இவ்வாறு உழவு பழக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

# இலங்கை வானொலியில் தலைவரின் பேட்டி ஒலிபரப்பு

தலைவர் திரு. வே. பிரபாகரன் பி. பி. சியின் தமிழோசைக்கு வழங்கிய பேட்டியை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மறு ஒலிபரப்புச் செய்துள்ளது.

பி. பி. சியின் தமிழோசை நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம், அண்மையில் யாழ்பாணம் வந்திருந்தபோது, தலைவர் பிரபாகரன் இப்பேட்டியை வழங்கியமையும், இது பி. பி. சியின் பல்வேறு அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாகியமையும் தெரிந்ததே. ■

# குப்பி விளக்கினால் கண்பார்வை பாதிப்பு

## மருத்துவ அறிக்கைகள் தெரிவிப்பு

போதியளவு வெளிச்சமின்றி, (மின்சாரத் தடையினால்) குப்பிவிளக்கில் தொடர்ந்து கல்வி கற்றுவருவதினால், தமிழீழ மாணவர்களின் கண்பார்வை குறைந்துவருவதாக மருத்துவர்களின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. யாழ். குடாநாடு, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இப்பாதிப்பு அதிகரித்துவருகின்றது.

குறிப்பாக யாழ். குடாநாட்டு மாணவர்கள் குப்பிவிளக்கில், மிகக்குறைந்தளவு வெளிச்சத்தில், நீண்டகாலம் கற்றுவருவதினால், அவர்களின் கண்பார்வைத்திறன் படிப்படியாகக் குறைந்து வருவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது . மண்ணெண்ணெய் விளக்கிலிருந்து வெளியேறும் புகையினாலும் கண்பார்வை பாதிக்கப்படுகின்றது. கண்பார்வைக் குறைவுக்கு போதியளவு போசாக்கின்மையும் ஒரு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கண்பாதிப்புக்குள்ளான பெருந்தொகையான மாணவர்கள் வைத்தியசாலைகளில் குறைந்தளவு வசதிகளுடன் சிகிச்சை பெற்றுவருகின்றனர். அதனால், மாணவர்களின் கல்வித்திறன் குறைவடையக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. ■

# கலை, இலக்கியப் படைப்புக்கள் சமூகப் புரட்சிக்கு வித்திடவேண்டும்

கலை, இலக்கியப் படைப்புக்கள் மக்களைச் சிந்திக்கத் தூண்டவேண்டும். பழமையிலும் பொய்மையிலும் பல்வேறு மாயைகளிலும் சிறைப்பட்டுக்கிடக்கும் மக்கள் மனதில், புரட்சிகரப் பார்வையைத் தோற்றுவிக்கவேண்டும். மாறிவரும் சமூக புறநிலைகளுக்கு ஒத்திசைவாக சமூக விழிப்புணர்வை உருவாக்கவேண்டும்.

இந்தக் காலகட்டத்தில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் ஆகியோரிடமிருந்து நான் கூடியளவு பங்களிப்பை எதிர்பார்க்கிறேன். ஒரு தாயகத்தைக் கட்டியெழுப்பும் பணி புனிதமானது. இந்தப் புனித பணியில், பங்குகொள்வது, எல்லோரதும் தேசியக்கடன். ஆயிரமாயிரம் போராளிகளின் அற்புதமான தியாகத்தில், உருவாகிவரும் எமது தாயகத்தை ஒரு உன்னதமான, மேன்மையான சமுதாயமாக மாற்றியமைக்க வேண்டும். இந்த சமூக மாற்றத்திற்கு வழிகோலும் வகையில் சிந்தனையாளர்களும், சிருஸ்டி கர்த்தாக்களும் எமது இயக்கத்திற்கு பக்கபலமாக நின்று பணியாற்றவேண்டும்.

இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப, வரலாற்று ஓட்டத்திற்கு அமைய, கலை - இலக்கிய கர்த்தாக்கள் புதுமையான புரட்சிகரமான படைப்புக்களை சிருஸ்டிக்க வேண்டும். இந்தப் படைப்புக்கள் எமது புனித விடுதலைப் போராட்டத்திற்கு உரம் ஊட்டுவதாக அமையவேண்டும். சமூகப்புரட்சிக்கு வித்திடுவதாக அமையவேண்டும்.

- தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உடன்பாடு ஏற்பட்டால் அன்றி போர் நிறுத்தம் செய்யக்கூடாது

□ இராணுவ அதிகாரிகள் அரசுக்கு ஆலோசனை

பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டாலன்றி, போர் நிறுத்தம் செய்யப்படக்கூடாது என்று சிறீலங்காவின் இராணுவ அதிகாரிகள் அரசுக்கு ஆலோசனை கூறியிருப்பதாக கொழும்பிலுள்ள பி. பி. சி. முகவர் ஜோர்ச் ஆர்னி கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், "போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்படுவது, இப்போது அரசின் முடிவில்தான் தங்கியுள்ளது. சிரேஸ்ட படை அதிகாரிகள் இது விடயத்தில் அரசுடன் ஒத்துழைப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது என்று அரசியல் விமாசகர்கள் மற்றும், நோக்கர்கள் கருதுவதாகத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் பி. பி. சிக்கு வழங்கிய பேட்டியைத் தொடர்ந்து, எழுந்துள்ள அரசியல் நிலைபற்றிக் குறிப்பிட்ட ஜோர்ஜ் ஆர்னி, "தமிழர்களின் நியாயமான அபிலாசைகள் தீர்க்கப்படவேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டிற்கும், இதுவிடயத்தில் அரசின் நிலைப்பாட்டிற்கும் இடையே இடைவெளி இருக்கும் என்றே கருதப்படுவதாகவும் குறிப்பிட்டார். ■

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆயுத விற்பனையாளரே தடை

## ராவய பத்திரிகை தெரிவிப்பு

இனப்பிரச்சினையை நுணுக்கமாக அணுகி, அதற்கு எதிராகத் தோன்றும் பாரதூரமான பிரச்சினைகளுக்கு ஈடுகொடுத்து, விடக்கூடிய அமைப்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு இன்னமும் காணப்படவில்லை. இவ்வாறு, ராவய சிங்களவார இதழ் அதன் அண்மைய வெளியீட்டில் சுட்டிக்காட்டியுள்ளது. அப்பத்திரிகை மேலும் கூறுகையில், "அரசாங்கம் இதுவரையில் பல ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. ஆனால், அவை சரிவர செயற்படுகின்றனவா என்பதை நிர்ணயம் செய்வதிலோ, அல்லது அவற்றிற்குரிய தீர்வை முன்வைப்பதிலோ பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா என்பது சந்தேகமாகவேயுள்ளது.

ஜனாதிபதிப் பதவி ஐ. தே. கவிடம் இருக்கும்வரை, இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக உருப்படியாக எதையும் பொதுஜன ஐக்கிய முன்னணி மேற்கொள்வது கடினமே. அதுவரையில், மக்களுக்குத் தமது கட்சிமீது நம்பிக்கை பிறக்கக்கூடிய சில விடயங்களை மட்டுமே, இவ்வரசினால் செய்யமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினையை முடிவிற்குக் கொண்டுவருவதில், ஆயுத விற்பனையாளர்களே முக்கிய தடையாக உள்ளனர். ஆயுத விற்பனையில் ஈடுபட்டுள்ள முக்கிய பிரமுகர்கள், இராணுவ அதிகாரிகளாகவே இருக்கின்றனர்.

இவர்கள், கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தத் தயாராகவுள்ளனர். ஐ. - தே. க, மற்றும் ஜனதா விமுக்தி பெரமுன, மக்கள் ஐக்கிய முன்னணி என்பனவும் அரசுக்கு எதிரான சந்தர்ப்பத்திற்காகக் காத்துள்ளன. இந்த எதிரான சக்திகளை எதிர்கொள்ளும் சக்தி, பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு இருப்பதாகத் தெரியவில்லை" எனவும் ராவய சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், "இனப்பிரச்சினையின் தீர்விலேயே நாட்டின் எதிர்கால வளர்ச்சி தங்கியிருப்பதாகவும், அப்பத்திரிகை சுட்டிக்காட்டி இருக்கின்றது" என்பது குறிப்பிடத்தக்கது. ■

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்துக

## - முன்னாள் விமானப்படைத் தளபதி

"ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியாது போனாலும், இருதரப்பினரிடையேயும் புரிந்துணர்வை ஏற்படுத்தவேண்டும். இதற்கு யுத்த நிறுத்தமே சிறந்தவழி" என, முன்னாள் விமானப்படைத் தளபதி கரி குணத்திலக்கா தெரிவித்துள்ளார்.

"யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி, பூநகரி -சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பதன் மூலம், யாழ். குடாநாட்டு மக்கள் ஏனைய பகுதிகளுடன் தொடர்புகொள்ளக்கூடிய வழிவகைகளை மேற்கொள்ளவேண்டும். இதுவே இருதரப்பினருக்குமிடையில் நம்பிக்கையை வளர்க்கும். எறிகணைத் தாக்குதல்கள், விமானக் குண்டுவீச்சுக்களை உடனடியாக நிறுத்தவேண்டும்" எனவும் தெரிவித்தார்.

"மின்கலங்கள் (பற்றரி) சாதாரணமாக வடபகுதியில், கடைகளில் உள்ளன; ஆனால், விலைதான் அதிகம். இது பொதுமக்களையே பாதிக்கும்; புலிகளின் நடவடிக்கையை எந்தவிதத்திலும் பாதிக்காது" என, அவர் மேலும் கூறினார். ■

# அயல் நாட்டுச் செய்திகள்

# ஒற்றையாட்சி அமைப்பில் இருந்து சிறிதளவேனும் விலகமாட்டோம்

## ஆயுதப் படையினருக்கு அமைச்சர் ரத்வத்த உறுதி

"வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொழுது நாட்டின் ஒற்றையாட்சி முறை ஒருபோதும் மாற்றப்படமாட்டாது" என பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

எந்தவொரு சமூகத்திற்கும் அநீதி இழைக்கப்பட அனுமதிக்கப்படமாட்டாது. விடுதலைப் புலிகளின் நியாயமான கோரிக்கைகள் மாத்திரமே ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

வடபகுதிக்கு அமைச்சர் மேற்கொண்ட விஜயத்தின்போது, இராணுவத்தினர் மத்தியில் உரை நிகழ்த்துகையில், இக்கருத்துக்களை வெளியிட்டார்.

அமைச்சர் ரத்வத்தவும் அவரது குழுவினரும் முதலில் பலாலி முகாமுக்கு விஜயம் செய்தார்கள். பொலிசாரினதும், ஆயுதப்படையினரதும் கொள்கைகளை அறிந்துகொள்வதும், முகாம்களைப் பார்வையிடுவதுமே அவர்களினது விஜயத்தின் முக்கிய நோக்கங்களாக இருந்தது.

அமைச்சர் ரத்வத்த விஜயம் செய்த முகாம்களில் இருந்த, சகல பொலிசாரும் ஆயுதப்படையினரும் தத்தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளியிட்டனர். சில படையினர் கருத்து வெளியிடுகையில், சமாதான பேச்சுவார்த்தைகளின்போது, கொடுக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகள் பின்னர், நிறுத்தப்பட்டமை பற்றிக் கூறினார்கள்.

இதற்கு அமைச்சர் ரத்வத்த பதிலளிக்கையில், "இத்தகைய நிலைமை இனிமேல் இடம்பெறாது", என உறுதியளித்தார்.

காரைநகர் கடற்படை முகாமுக்கு அமைச்சர் விஜயம் செய்தபோது, சமாதான நடவடிக்கை சம்பந்தமாக அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? என்று அங்கு கேட்கப்பட்டது.

அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், "இலங்கையில் ஒற்றையாட்சிமுறை என்ற அமைப்புக்குள் நடவடிக்கை மேற்கொள்ள அரசாங்கம் திட்டவட்டமாக முடிவு செய்துள்ளது" என்று சொன்னார். "இந்த நிலைப்பாட்டிலிருந்து சிறிதளவேனும் விலகுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது" என்றும் அவர் கூறினார்.

"முன்னைய நாட்களைப்போல, விடுதலைப் புலிகள் அரசாங்கத்தை தப்பான வழியில் இட்டுச் சென்றால் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது", என்று பாதுகாப்புப் படையின் மற்றொரு அங்கத்தவர் கேட்டதற்கு, முக்கிய தவறுகள் மீளாய்வு செய்யப்படும் என்றும், இது மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் பதிலளித்தார்.

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமுக்கும் பிரதி அமைச்சர் சென்றிருந்தார். அங்கு பொலிஸ் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தவும், பாதுகாப்பு செயலாளரும் இயக்கச்சி, பூநகரி இராணுவ முகாம்களுக்கும் சென்றனர். அங்கு இம்முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டபோது, தான் உயரதிகாரியாக இருந்ததை அவர் நினைவு கூர்ந்தார். ■

# புதிய அரசின் முயற்சிக்கு பௌத்த காங்கிரஸ் ஆதரவு

புதிய அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி அளித்தவாறு சாந்தியையும், முன்னேற்றத்தையும், ஒழுங்கையும் ஏற்படுத்த இலங்கை பௌத்த காங்கிரஸ் தனது முழு ஆதரவையும் வழங்கும் என்று அதன் தலைவர் டாக்டர் மாபலகம விபுல்சார தேரோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா தேர்தலின் மூலம் பிரதமராகப் பதவியேற்றிருப்பது குறித்து, காங்கிரஸ் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கின்றது. மக்கள் நாட்டில் பயமின்றி, நிம்மதியாக வாழ்வதற்கு ஏற்றதாக சந்திரிகாவின் ஆட்சி, சமாதானத்தையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்துவதற்கு மக்கள் தமது ஆதரவை வழங்கவேண்டும் எனக்கேட்டுக்கொள்கின்றோம்.

மக்களின் துயரங்களுக்குத் தாம் தீர்வு காணப்போவதாகப் பிரதமர் சந்திரிகா உறுதிமொழி வழங்கியமை குறித்து, காங்கிரஸ் நம்பிக்கை கொண்டிருக்கின்றது" எனவும் தெரிவித்தார். ■

# சூரியகந்த புதை குழியில் மேலும் எலும்புகள் மீட்பு

சூரியகந்த மனிதப் புதைகுழியில், மேலும் பல மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எம்பிலிப்பிட்டியாவில் உள்ள சூரியகந்த புதைகுழிகள், இரு இடங்களில் தோண்டப்பட்டன. அப்போது சில எலும்புகளும், நீண்ட கேசமும், பற்களும் கண்டெடுக்கப்பட்டன.

இவையும், மண் மாதிரியும் விஞ்ஞானப் பரிசோதனைக்காக கொழும்பு அனுப்பப்பட்டுள்ளன. இம்மண்ணின் மாதிரி, புதைகுழியின் காலத்தைத் தீர்மானிக்க உதவும். இன்னும் பல புதைகுழிகள் இருப்பதாக பல நிபுணர்கள் கருதுகின்றனர். இவை தொடர்ந்து தோண்டப்படும் எனக்கூறப்படுகின்றது.

காலநிலை மோசமாக இருந்தும், புதைகுழி தோண்டும்பணி ஆரம்பமானது. கொழும்பு பிரதம சட்டவைத்திய அதிகாரி, வெளிநாட்டு மருத்துவக்குழு, அரச இரசாயன ஆய்வாளர், கைவிரல் அடையாள பணியகம், பொலிஸ், புவியியல் திணைக்களம் என்பவற்றால் மேற்கொள்ளப்படும் இப்பணிக்கு பேராசிரியர்கள் நந்ததாசகோதாகொட, சந்திரசிறி நெரியல் ஆகியோர் உதவி வழங்குகின்றனர். ■

# வாக்களிக்கும் வாய்ப்பு தமிழர்களுக்கு மறுப்பு

களுத்துறை மாவட்டத்தில் 60, 000 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வசித்தும், பலருக்கு இம்முறை பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

பல வருடங்களாக இவர்கள் இப்பகுதியில் வசித்திருந்தும், இவர்களது பெயர்கள் வாக்காளர்கள் இடாப்புக்களில் பதியப்படாததினால், இந்நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்றமுறை வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த பல தமிழர்களின் பெயர்கள், இம்முறை வாக்காளர் இடாப்பிலிருந்து விடுபட்டுப் போயுள்ளதாகவும், அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். ■

# போர் நிறுத்த விடயத்தில் பிரதமர் பக்கமே நாம் நிற்போம்

## பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கமில்டன்

"போர் நிறுத்தம் செய்வதற்கான சாத்தியக்கூறு பற்றி தற்போது ஆராயப்படவில்லை. இனிமேல் நடைபெறவுள்ள கூட்டத்தில் இவ்விடயம் எடுக்கப்பட்டால் பாதுகாப்பு அதிகாரிகள், பிரதமர் சந்திரிகா பக்கமே நிற்பர்", என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

பிரதமர் சந்திரிகா தனது வடபகுதி விஜயம் குறித்து, பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆராய்ந்துள்ளமை தெரிந்ததே. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சந்திரிகாவின் முதல் ஒரு மாதகால ஆட்சியும் இனப்பிரச்சினைக்கான தீர்வும்

**இனப்பிரச்சினைக்கான தீர்வின் ஆரம்பகட்ட நடவடிக்கைக்கு பொருண்மியத் தடைநீக்கம், போக்குவரத்துப் பாதைதிறப்பு, போர்நிறுத்தம் என்பன முக்கியமானவை.இதனை பிரதமர் சந்திரிகா தலைமையிலான அரசு உணர்ந்துள்ளது. ஆனால் இவற்றை மேற்கொள்ள, நடைமுறைப்படுத்த இராணுவம் ஒத்துழைக்கவில்லை. அதனாலேயே இனப்பிரச்சினை விவகாரத்தில், பிரதமர் சந்திரிகாவின் முதல் ஒருமாதகால ஆட்சியில் பின்னடைவு ஏற்பட்டது. இப்பின்னடைவையே இக்கட்டுரை விளக்கிச் செல்கின்றது.**

ஜெயராஜ்

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பதவி ஏற்று 18.09.-1994 உடன் ஒரு மாதகாலம் நிறைவுற்றுள்ளது. இக்காலப் பகுதியில் பல்வேறுபட்ட விடயங்களில் புதிய அரசு கவனம் செலுத்தியது போன்று, இனப்பிரச்சினை விவகாரத்திலும் அக்கறை காட்டியது என்றே கொள்ளவேண்டும்.

இனப்பிரச்சினையைப் பொறுத்துக் கொள்கை அடிப்படையில், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு முன்னைய ஐ. தே. க. அரசைவிட முற்போக்கான கொள்கையைக் கொண்டுள்ளது என்பதை, இற்றைவரை அது மேற்கொண்ட நடவடிக்கைகள், இது தொடர்பாக வெளியிடும் அறிவிப்புக்கள் வெளிப்படுத்துபவையாகவுள்ளன.

இந்த வகையில் வடக்கு - கிழக்கில் நிலவுவது இனப்பிரச்சினையே என்பதை ஏற்றுக் கொண்டுள்ளதோடு, அதற்கு அரசியற்தீர்வு காணப்படவேண்டும் என்பதையும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அடுத்ததாக, விடுதலைப் புலிகள் இயக்கமே தமிழ் மக்களின் முக்கிய பிரதிநிதிகள் என்பதையும் புதிய அரசு ஒப்புக் கொண்டுள்ளமையானது, இனப்பிரச்சனை விவகாரத்தில் முன்னேற்றகரமான அம்சம் என்பதில் ஐயமில்லை.

இதேவேளை, இனப்பிரச்சினை விவகாரத்தில் பிரதமர் சந்திரிகா மேற்கொண்ட சில நடவடிக்கைகளும் அவரின் நல்லெண்ண முயற்சிகளைக் காட்டுவதாகவே அமைந்துள்ளன. இந்தவகையில், வடபகுதி மீது விதிக்கப்பட்டிருந்த பொருட்கள் மீதான தடையில் இருந்து ஒரு தொகுதிப் பொருட்களுக்கு விலக்கு அளித்தமை, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நல்லெண்ண சூழ்நிலை ஒன்றை உருவாக்கும் முயற்சியாகவே கொள்ளமுடியும்.

மேலும், இவ்விடயத்தில் இவ் ஒருமாத காலத்தில் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா சாதித்த முக்கியமான விடயம், விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் கடிதமூலமான நேரடித் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டமையாகும். இதற்கு, அரசின் நல்லெண்ண முயற்சிகளுக்குத் தனது நல்லெண்ண நடவடிக்கையாக 10 போர்க் கைதிகளை விடுதலைசெய்து, தலைவர் பிரபாகரன் அது தொடர்பாக விடுத்ததொரு அறிக்கையை அரசு பயன்படுத்திக்கொண்டது.

இவ்வறிக்கைக்கு, நேரடியாகத் தலைவர் பிரபாகரனுக்குப் பதில் அளித்த பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா, ஆரம்பப் பேச்சுவார்த்தைக்கான விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் நியமிக்குமாறும் கோரியிருந்தார். இந்த வகையில், இனப்பிரச்சினை தொடர்பாகத் தமிழர் தரப்பு நல்லெண்ண சமிக்கைகளைக் காட்டியமையானது, பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்ததெனலாம். இதனை முதற்கட்ட முன்னேற்றம் என்று கூடக்கூறலாம்.

ஆனால், இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காண்பதில், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு இவ்வொரு மாதகாலப் பகுதியில், இராணுவத்திடம் இருந்து எதிர்நோக்கியுள்ள முட்டுக்கட்டையானது, இவ்விவகாரத்தில் அதன் முன்னேற்றத்தைப் பாதிப்படையச் செய்துள்ளதோடு, இனப்பிரச்சினை விவகாரத்தில் அடுத்தகட்ட நடவடிக்கையையும் சிக்கலாக்கியுள்ளதெனலாம்.

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரம் என்பது, தற்பொழுது தனியாக அதிகாரப் பரவலாக்கலோடு மட்டும் தொடர்புடையதல்ல; அதற்கு முன்னரே, பல படிகள் கடக்கப்படவேண்டிய விவகாரமாகவும் உள்ளது. இதில் முக்கியமானதாக, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படவேண்டும் என்பதோடு, சமாதானப் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணப்படுவதற்கான ஒரு சமாதான சூழ்நிலையும் உருவாக்கப் படவேண்டியுள்ளது.

## "விடுதலைப்புலிகள் இயக்கமே தமிழ் மக்களின் முக்கிய பிரதிநிதிகள்"

இந்தவகையில், இனப்பிரச்சினைக்கான தீர்வின் ஆரம்பக் கட்ட நடவடிக்கையாக பொருண்மியத்தடை நீக்கம், போக்குவரத்துப் பாதைத் திறப்பு, போர் நிறுத்தம் ஆகிய அம்சங்கள் முக்கியம்பெற்றன. இதனை, பிரதமர் சந்திரிகா தலைமையிலான புதிய அரசும் உணராமல் இல்லை.

இந்தவகையில், அரசு பதவி ஏற்றுக்கொண்டதும், பொருண்மியத்தடை நீக்கத்தில் அக்கறை காட்டியமை வெளிப்படை. இதன்மூலம் நல்லெண்ண சூழ்நிலையை முதலில் உருவாக்கலாம் எனவும், அரசு கருதியிருந்தது. இதன் ஆரம்பகட்ட நடவடிக்கைகளை, பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட கேணல் அனுருத்த ரத்வத்த மேற்கொண்டார்.

ஆனால், எதிர்பார்த்த அளவு சுலபமாகக் காரியம் இருக்கவில்லை. இராணுவத்தரப்பு வெளிப்படையாக அரசியல் தீர்விற்கு ஆதரவாகப் பேசிக்கொண்டபோதிலும் அரசியல் தீர்விற்கான ஆரம்ப முயற்சியான நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்கும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைபோட்டது. பொருண்மியத்தடை நீக்கத்திற்கோ, இது தொடர்பான ஏனைய நடவடிக்கைகளுக்கோ இராணுவம் ஒத்துழைக்கவில்லை என்றே கூறலாம்.

இந்நிலையில், தனது இராணுவம் தொடர்பான அணுகுமுறை தோல்வியில் முடிவடைந்துவிட்டதை வெளிக்காட்டவிரும்பாத அரசு, இராணுவத்தரப்பு தடைவிதிப்பதில் ஆர்வம்காட்டாத 28 பொருட்களின் மீதான தடையைத் தளர்த்தியது.

ஆனால், வெளிப்போர்வைக்கு இராணுவமும் இப்பொருட்களின் தடைநீக்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியதாகவும், வரவேற்றதாகவும் ஒருவித மாயை உருவாக்கப்பட்டது. உண்மையில், தற்பொழுது தடைநீக்கப்பட்ட பொருட்களில் ஒரு சிலவற்றைத் தவிர, மிகுதியானவற்றை வடக்கில் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதினாலோ அன்றி, தடைநீக்கப்பட்ட பொருட்களினால் தமக்குப் பாதிப்பு ஏதும் இல்லை என்பதை, இராணுவம் உணர்ந்தமையினாலோ இருக்கலாம்.

ஆனால், ஏனைய பொருட்கள் விடயத்தில் இராணுவம் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவில்லை. இந்த நிலையில், அரசு இராணுவத்துடன் முரண்பாடுகொள்ளாது, கண்ணியமாகப் பின்வாங்கிக்கொண்டுவிட்டது என்றே கூறமுடியும்.

இதை ஒத்த நிலையே போக்குவரத்துப்பாதை திறத்தல், யுத்த நிறுத்தம் என்பவை தொடர்பாகவுமுள்ளது. பதவி ஏற்ற காலத்தில், விடுதலைப் புலிகள் இயக்கம் ஒத்துழைப்பு நல்கினால் பூநகரிப் பாதையைத் திறக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக அறிவித்து வந்த பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தற்பொழுது விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு கிடைத்திருப்பினும், பூநகரி பாதை திறப்பது பற்றிப் பேசுவதையே தவிர்ப்பதாகத் தெரிகின்றது. இதற்கு இராணுவத் தரப்பின் முழுமையான எதிர்ப்பே காரணமாகும். அதாவது, தனது நிலையில் இருந்து இராணுவம் சிறிதும் பின்வாங்காது என்ற நிலையில், பூநகரிப்பாதையை திறப்பது தொடர்பாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டிருப்பது போன்று உள்ளது.

போர் நிறுத்தம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடும், இவ்வாறானதொரு நெருக்கடிக்குள்ளாகியுள்ளது என்றே கூறலாம். "சமாதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையைச் சீர்குலைக்கும்" என பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா பகிரங்கமாகக் குறிப்பிட்டிருந்த போதும், அவரால் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கென ஒரு போர் நிறுத்தத்தை அமுல்படுத்தக் கூடிய நிலை இன்றில்லை.

ஒருவகையில், இதற்கான அதிகாரம் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிடம் இருப்பது சற்று சிக்கல்களை உருவாக்கியிருக்கக்கூடியதாயினும், இராணுவத்தரப்பின் எதிர்ப்பே பிரதமர் சந்திரிகா இவ்விடயத்தில் வெற்றி பெற முடியாது போய்விட்டதற்குக் காரணமாகும். ஏனெனில், தேர்தலில் தோல்வி அடைந்தபின்னர் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா, பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் முரண்பாட்டை வளர்த்துக் கொள்ளாது செயற்பட்டுவந்தார். இதனால், ஜனாதிபதி முட்டுக்கட்டை போட்டார் என்று கருதமுடியாது.

இவ் விடயத்தில், பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா நேரடியாக எடுத்துக் கொண்ட முயற்சியும் தோல்வியிலேயே முடிவுற்றது எனலாம். ஆரம்பத்தில் இவ் விடயத்தை பிரதிப்பாதுகாப்பு அமைச்சரே இராணுவத்தினருடன் கையாண்டு வந்தாராயினும், முட்டுக்கட்டை தோன்றியபோது பிரதமர் சந்திரிகாவே இது தொடர்பாக முப்படைகளின் தளபதிகளையும், உயர் பாதுகாப்புப்படை அதிகாரிகளையும் சந்தித்து உரையாடத் தீர்மானித்தார்.

சுமார் நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் நடந்த இந் நீண்ட சந்திப்பில் எதுவித முடிவும் எடுக்கப்படவில்லை. இச்சந்திப்பின்போது, வடக்கு - கிழக்குப் பிரச்சினையைப் பிரதமர் கேட்டு அறிந்து கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டபோதும் இச்சந்திப்பானது பிரதமர் சந்திரிக்காவிற்கு வெற்றி அளிக்கவில்லை என்றே கூறவேண்டும்.

இச்சந்திப்பில் பிரதமர் யுத்த நிறுத்தம் பற்றிப்RRRR பேசவில்லை எனப் பின்னர் தெரிவிக்கப்பட்டதாயினும், அது எந்தளவிற்கு உண்மை என்பதைத் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால், நான்கு மணித்தியாலங்கள் நீடித்த இச்சந்திப்பில் முக்கியமான விடயங்கள் எவையும் பேசப்படவில்லை என்பது ஏற்புடையதொன்றாகக் கொள்ள முடியாது. ஆயினும், சிலசமயம், யுத்த நிறுத்தத்திற்கும் இராணுவம் இன்றைய நிலையில் இருந்து பின்வாங்குவதற்கும் தயாராக இல்லை என்பதைத் தெளிவுபட அறிந்திருப்பின், இக் கோரிக்கையை பிரதமர் சந்திரிகா முன்வைக்காமலும் இருந்திருக்கக்கூடும்.

இவ்வாறாக பிரதமர் சந்திரிகாவின் முயற்சியும் தோல்வியுற்ற



நிலையிலேயே, படைமுகாம்களுக்கு விஜயம் செய்து சூழ்நிலைகளை அவதானிப்பதென அரசாங்கம் முடிவு செய்தது. இராணுவ முகாம்களுக்கு விஜயம் செய்யும் இம் முடிவானது சமாதான முயற்சி தொடர்பாக இராணுவத்தினரின் நிலைப்பாட்டைக் கேட்டறிவதற்கும், அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விளக்குவதற்கும் எனக் கூறிக் கொள்ளப்பட்ட போதிலும், இது அரசாங்கத்தின் கொள்கை தொடர்பாக களத்திலுள்ள இராணுவத்தினரின் நாடி பிடிக்கும் செயலாகவே இருந்தது. ஆனால், இதுவும் அரசிற்குத் திருப்தி அளித்திருக்க நியாயமில்லை. இராணுவத்தினர் எழுப்பிய கேள்விகளுக்கு அரசாங்க தரப்பு பணிந்தே பதில் அளிக்க வேண்டி வந்தது.

## "சமாதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையைச் சீர் குலைக்கும்"
**- பிரதமர் சந்திரிகா**

அரசாங்கம் இராணுவத்தின் மீது எதுவித அழுத்தத்தையும் பிரயோகிக்கூடிய நிலையில் இல்லை என்பதை பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா, தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்...

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்திய - சிறீலங்கா ஒப்பந்த அமுலாக்கம்; முதலில் பின்வாங்கியது சிறீலங்கா அரசே!

## இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலர் டிக்சிற்

இச்செவ்வியை, சண்டேலீடர் (Sunday Leader) என்ற செய்தித்தாளுக்கு வழங்கிய திரு. டிக்சிற் 1987 யூலையில், இலங்கை -இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்டவேளையில், இலங்கையில் இந்தியத் தூதுவராகக் கடமையாற்றியவர். இக்காலத்தில், இனப்பிரச்சினை தொடர்பாக ராஜீவ் காந்தியின் தூதுவராகவும் செயற்பட்டவர். எம்மினத்தின் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து, அறப்போர் தொடுத்த திலீபன் அவர்கள், அணு அணுவாக மரணித்தபோது, அதனைத் தடுக்கத் திராணியற்று பதவியில் ஒட்டிக்கொண்டிருந்தவர். எமது மூத்ததளபதிகளான குமரப்பா -புலேந்திரன் உட்பட்ட 12 வேங்கைகள் சயனைட் அருந்தி மரணித்தபோது, அத்தியாகிகளைக் காப்பாற்ற எந்தவித நடவடிக்கையும் எடுக்காது, தமிழின அழிப்பினைக் கண்டும் பாராமுகமாக இருந்தவர். இந்திய இராணுவத்தால் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டும், பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டும் இருந்தபோதும், அதைத்தடுத்து நிறுத்த முடியாது இருந்தவர். தனது பதவிக்காலத்தில், தமிழீழத்தவர்களுக்காக இவ்வாறன சேவைகளைச் செய்த டிக்சிற் அவர்களுக்கே, அவரது ஓய்வுகாலத்தில் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் பற்றிய 'சுடலை ஞானம்' பிறந்துகொண்டிருக்கின்றது. இது காலம் கடந்துவரும் ஞானம் என்றாலும், இது தாங்கிவரும் உண்மைகள், விடுதலைப் புலிகளின் சரியான நிலைப்பாட்டினை, அமைதிப்படை என வந்து ஆக்கிரமிப்புச் செய்த இந்திய அரசினதும் -சிறீலங்கா இனவாதிகளினதும் முகமூடியினைப் புரிந்துகொள்ள முடியாதிருக்கும் எம்மவர்களும், சர்வதேசமும் உணர்வதற்கு சிறியளவிலேனும் உதவும். தீருவில் தீவில் சங்கமமாகிய 12 வேங்கைகளினதும் 7 ஆவது நினைவுநாள் நிகழ்வுகள் நடந்தேறியிருக்கும் இத்தருணத்தில் டிச்சிற் அவர்களின் இச்செவ்வியை வெளியிடுதல் பொருத்தமாக அமையும் என்பதில் ஐயமில்லை. ■

"தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்வதில், இலங்கையின் அரசு தவறிவிட்டது. இலங்கையில் நிகழும் அனர்த்தங்களுக்கும், வன்முறைச் சம்பவங்களுக்கும் இதுதான் அடிப்படை. இலங்கையின் உள்நாட்டு விவகாரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிப்பதில் இருக்கும் தயக்கத்துடன், இதனைக் கூறுகின்றேன்". இவ்வாறு இலங்கைக்கான முன்னாள் தூதுவரும் வெளியுறவுச் செயலாளருமான ஜே. என். டிக்சிற் கூறியுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும், 'சண்டேலீடர்' பத்திரிகைக்குப் பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில், "வெளிவிவகார அமைச்சின் அதிகாரி என்றவகையில் கொள்கை முடிவு எடுப்பதில் சம்பந்தப்படவில்லை. நிலைமைகளை அவதானிப்பதிலும் முடிவுகள் அமுலாக்கப்படுவதில் கண்காணிப்பு செய்வதும், பொருத்தமான மாற்றுவழிகளை சிபார்சு செய்வதும் தான், வெளியுறவுச் சேவையில் தூதுவர் ஒருவரின் பணியாகவுள்ளது. 1985 இல் கொழும்பிற்கான தூதுவராக நியமனம்பெற்றபோது, ஐக்கியப்பட்ட -ஜனநாயக ரீதியான -பல்லினங்களைக்கொண்ட -இலங்கையில், தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கான வகையில் செயற்படும்படியே எனக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது. இந்த அடிப்படையிலேயே நான் செயற்பட்டேன்" எனத் தெரிவித்தார்.

இப்பேட்டியில்,

**ஒப்பந்தத்தின் சரத்துக்கள் அமுலாக்கப்படுவதில் அரசும், தீவிரவாதிகளும் தத்தம் கடமைப்பாடுகளில் இருந்து பின்வாங்கினர் எனக்குறிப்பிட்டு இருந்தீர்கள். இதில் எங்கே தவறு நேர்ந்தது எனக் கருதுகிறீர்கள்?**

புன்னகையுடன் பேசத்தொடங்கிய அவர், "இதுபற்றி பேசப்புகுந்தால், ஒரு நாளில் அரைப் பகுதிக்கு மேல் பேசவேண்டியிருக்கும்; 1987 இன் செப்டம்பர் இறுதிப் பகுதியிலும் அக்டோபர் முற்பகுதியிலும் இரு தரப்பினருக்கும் இடையே 'செய்தி இடைவெளிகளும்' தத்தம் பங்கிலிருந்து பின்வாங்குதல்களும் அதிகரித்தவண்ணம் இருந்தன. அந்த நேரத்தில், சிறீலங்கா அரசாங்கத்தின் விருப்பிற்குரியவனாக நான் இருக்கவில்லை. ஒப்பந்தத்தின் அமுலாக்கலில், முதலில் பின்வாங்கியது சிறீலங்கா அரசாங்கமே. தமிழ் மொழிக்கு உரிய இடத்தை வழங்குவதில், அவர்கள் தாமதங்களை வேண்டுமென்றே மேற்கொண்டனர். நிதி விடயத்தில், அதிகாரப் பரவலாக்கம் செய்வதில் தாமதம் செய்தனர். இதனைத்தொடர்ந்து, விடுதலைப் புலிகளும் ஏனையோரும், 1983 ஆம் ஆண்டின் நிலை மீளத்திரும்புவதாகவும், சர்வகட்சி மாநாட்டிற்கு நிகழ்ந்த கதிபற்றியும் எண்ணத் தலைப்பட்டனர்.

இத்தருணத்தில், விடுதலைப் புலிகளின் மூத்ததளபதிகள் 17 பேர் சிறீலங்கா படையினரால் கைது செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்றது. முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஜனாதிபதி ஜே. ஆரின் பணிப்புரை அமுல்படுத்தப்படுவதை தவிர்க்கும் முகமாக, கொழும்பிலிருந்து பலாலிக்கு விசேட விமானத்தை அனுப்பி வைத்தார். இந்தப் 17 பேரையும் இந்தியப்படையின் பாதுகாப்பில் வைத்துக்கொண்டு, பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கு ஜே. ஆர். என்னுடன் இணக்கம் தெரிவித்தார். ஆனால், 17 பேரையும் கொழும்பிற்கு கொண்டுவர சிறீலங்காப் படையினர் முயற்சித்ததையடுத்து, அவர்கள் சயனைட் அருந்தினர். இதைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகளுக்கு இயல்பாகவே சீற்றம் ஏற்பட்டது. இவர்கள், இதனை ஒரு காட்டிக்கொடுப்பாகவே கருதினர்".

**இதனால்தான், இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் சிக்கல்கள் எழுந்ததா?**

"நிச்சயமாக, ஜனாதிபதி ஜெயவர்த்தனா சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில், ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்தவே விரும்பினார்; ஆனால், அவரது அமைச்சர்களிடமிருந்து அவர் பலத்த எதிர்ப்பை எதிர்நோக்கியிருந்தார். காமினி ஜெயசூரியா, லலித் அத்துலத்முதலி, பிரேமதாசா போன்றோர் ஒப்பந்தம் குறித்து முழுமையாக எதிர்த்தனர்" என்றார்.

**உங்கள் நீண்டகால அனுபவத்தில், விடுதலைப் புலிகள் இயக்கம் பிரதான ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைவார்கள் எனக் கருதுகின்றீர்களா?**

"இதுவரையிலான சம்பவங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, விடுதலைப் புலிகள் தான் இப்பிரச்சினையின் மையப்புள்ளிகள். அவர்கள் ஜனநாயக வழியில் இணைகின்றார்களோ இல்லையோ என்பது, சிறீலங்கா அரசாங்கத்தினதும், பெரும்பான்மை சிங்கள மக்களினதும் செயற்பாடுகளில் தான் தங்கியிருக்கின்றது. அது தமிழர்களின் நியாயமான அபிலாசைகள் பூர்த்திசெய்யப்படுவதுடன் தொடர்புடையது" எனக்குறிப்பிட்டார்.



> "விடுதலைப்புலிகள்தான் இப் பிரச்சினையின் மையப்புள்ளிகள். அவர்கள் ஜனநாயக வழியில் இணைகின்றார்களோ இல்லையோ என்பது, சிறீலங்கா அரசாங்கத்தினதும் பெரும்பான்மை சிங்கள மக்களினதும் செயற்பாடுகளில்தான் தங்கியிருக்கிறது."
>
> -டிக்சிற்

**நீங்கள் கொழும்புக்கான தூதுவராக நியமனம்பெற்றது முதல், வெளியுறவுச் செயலாளராகி ஓய்வு பெற்றதுக்கும் இடையிலுள்ள காலப்பகுதியிலான சம்பவங்களின் அடிப்படையில், சிறீலங்கா -இந்தியா உறவுகள் எப்படியிருக்கின்றது எனக்கருதுகிறீர்கள்?**

"நல்லது; உறுதியான, பொதுவான, நல்லெண்ண அடிப்படையிலான நல்லுறவுதான் நிலவுகின்றது. ஆனாலும், இனப்பிரச்சினை தொடர்பான ஒரு மயக்க நிலைமையும், தேக்க நிலையும் காணப்படுகின்றது தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு முழுமையாகக் காணப்படுவதே நல்லது.

இப்பிரச்சினையிலிருந்து இந்தியா ஒதுங்கிக்கொண்டுவிட்டது என்பதை நான் கூறமுடியும். இப்பிரச்சினையில் இந்தியா இப்போது மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ ஆர்வத்துடன் இல்லை. நாங்கள் முயற்சித்ததும், அம்முயற்சி பயனளிக்கவில்லை என்பதும் தெரிந்ததே. எனினும், இனப்பிரச்சினை முழுமையாக, சுமுகமாகத் தீர்க்கப்படும் வரையில், பொதுவான நல்லுறவும் பரந்த அடிப்படையிலான உறவும் இருந்தாலும், ஐயுறவுகளும் இருக்கத்தான் செய்யும்".

**ஜனாதிபதி விஜயதுங்காவின் இனவாதப் பேச்சுக்கள் குறித்து, இந்திய வெளியுறவு அமைச்சின் பிரதிபலிப்புக்கள் எப்படியிருந்தன?**

இதுபற்றி நாங்கள் அக்கறைகொண்டிருந்தோம். எனினும், சிறீலங்காவின் உள்விவகாரம் தொடர்பாகக் கருத்துக் கூறவிரும்பவில்லை, இலங்கையர்கள் தான் இதுபற்றித் தீர்மானிக்க வேண்டும். இப்போது, ஒரு தனிப்பட்ட பிரஜை என்றவகையில் கருத்துக் கூறமுடியும். தமிழர்களின் அபிலாசைகளைப் புறக்கணித்து, சிங்கள இனவாதிகளைத் திருப்திப்படுத்தும் போக்கு வளருவது, இலங்கையின் ஐக்கியத்தைப் பாதிக்கும். இதுபற்றி இலங்கையர்களே தீர்மானிக்க வேண்டும்.

> "தமிழர்களின் அபிலாசைகளைப் புறக்கணித்து, சிங்கள இனவாதிகளைத் திருப்திப்படுத்தும் போக்கு வளருவது. இலங்கையின் ஐக்கியத்தைப் பாதிக்கும்."
>
> - டிக்சிற்

**இந்தியப் படையினர் இலங்கையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் இந்திய அரசியல் அரங்கில் பயனுள்ளதாக அமைந்ததா?**

"இந்தியப் படையினர் தன்னிச்சையாக, ஒரு தலைப்பட்சமாக அங்கு வரவில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில், சிறீலங்கா ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே அவர்கள் சென்றனர். பிரேமதாசா வேண்டாம் என்றபோது, அவர்கள் வெளியேறிவிட்டனர். அத்துடன் கதை முடிந்தது. இதுபற்றி மேலும் எதுவும் கூற விரும்பவில்லை.

**சார்க் உடன்பாட்டின்கீழ், இந்தியத் துருப்புக்களை அனுப்பும்படி இலங்கை மீண்டும் கேட்குமாயின் என்ன நடக்கலாம்?**

"அத்தகைய தீர்மானம் அல்லது உடன்பாடு இல்லாத நிலையில், இக்கேள்விக்கே இடம் இல்லை. இது உங்களுடைய பிரச்சினை நீங்கள் தீர்வுகாண வேண்டிய பிரச்சினை".

**ராஜீவ் காந்தி கொலைவழக்குத் தொடர்பாக, விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரை நாடு கடத்தும்படி கோரிக்கை விடப்படும் சாத்தியம் இருக்கின்றதா?**

"இதுபற்றி எதுவும் எனக்குத் தெரியாது. இது தொடர்பாக இந்தியாவில், விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளது. எல்லாவிதமான சட்ட ஏற்பாடுகளும், நடைமுறைகளும் மேற்கொள்ளப்படும் என்றே கருதுகின்றேன்".

**இந்தியப்படை மீண்டும் இலங்கைக்குச் செல்லுமா?**

எனக்குத் தெரியாது; ஆனால், குறுகிய எதிர்காலத்தில் அப்படி நடக்கும் சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை. என்னால் அதற்கான சாத்தியப்பாட்டை எதிர்நோக்கவும் முடியவில்லை; அவ்வாறு நிகழவேண்டும் என்று வாதிடவும் விரும்பவில்லை. நீண்டகாலப்போக்கில் என்ன நடக்கும் என்பதை எவர்தான் அறிவார். ■

●●●●●●●●●●●●●

# இரு தரப்பு பேச்சு...

வெற்றியை நோக்கிச்செல்வதற்கு அடிப்படைப்பிரச்சினைகள் பற்றியும் ஆராய விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இரு தரப்பு பேச்சு தமிழீழத்தின் இறைமையைப் பாதிக்காது**

ஆகவே, இன்று நடைபெறக்கூடிய எந்தப் பேச்சுவார்த்தையும் 'இருதரப்பிலான', 'இருநாட்டினங்கள் உடனான' பேச்சுக்கள். இவற்றால் தமிழீழத்தின் இறைமையோ அன்றி, உரிமைகளோ எவ்வித பாதிப்பையும் என்றும் அடையப்போவதில்லை. இப்பேச்சுவார்த்தைகள் தமிழ் தேசிய மக்களும் -சிங்களத் தேசிய மக்களும் சரிசமானமான முறையில், தங்களது மொழி, பண்பாட்டுப் பாரம்பரியங்கள் பேணப்பட்டநிலையில், தங்களது தாயகத்தை தமிழர் தாயகம், சிங்களவர் தாயகம் எனக் கூறுவது கற்பனைகளல்ல; இருக்கைநிலைகள் என்ற அடிப்படையில், அதேவேளை, இருநாட்டின மக்களதும் அரசியல், பொருண்மிய, சமூகக் கூட்டுறவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தன்மை வாய்ந்தவை. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடல் அசுரனை சிதறடித்த

## 19-9-94 அன்று கற்பிட்டியில்



பெண் கடற் கரும்புலி
**லெப்.கேணல் நளாயினி**
வல்வெட்டித்துறை



பெண் கடற் கரும்புலி
**மேஜர் மங்கை**
மிருசுவில்

## துப்பாக்கியின் துவாரத்தை மூடிவிட்டு யுத்தத்தை

முகிலையும் தொட்டு எரிப்பதுபோல...
சிலாபத்துறைக் கடலில் என்ன தீப்பிளம்பு?
வியாழக்கிரகத்தில் மோதிய வால்வெள்ளி
இலக்குமாறி இங்கே விழுந்ததா?
இல்லை,
கடலின் நடுவே
தங்கை 'நளாயினி' நடாத்திய ''அக்கினி வேள்வி'' அது
'மங்கையும்'
'வாமனும்' 'லக்ஸ்மனும்'
சேர்ந்து மூட்டிய 'தியாகத்தீ' அது.
காங்கேயன்துறையில்...
'அங்கையற்கண்ணி' அனல்விழி திறந்தாள்.
தாய்க்கப்பல் தவிடுபொடியானது.
சிலாபத்துறையில்.
நளாயினியின் குருதிக்கலங்கள் கொதித்தன.
தந்தைக் கப்பல் தகர்ந்தது.
மிஞ்சிய பிள்ளைக் கப்பல்களை
இனிக் கடற்புலிகள் கையில் எடுத்து வருவார்கள்.

'அமைதிப் புறா'வின் வருகைக்கு
தேதி குறித்துத் தாருங்கள் என்று
கடிதமெழுதிவிட்டுக் காத்திருந்தபோது,
மட்டக்களப்பை சுற்றிவளைத்த சேதி வந்தது.
மின்சாரம் வருமென்ற நம்பிக்கையில்
இருண்ட முகங்கள் இங்கே பிரகாசமான போது,
பேசுவதற்கு மேசை போடலாம்
'துப்பாக்கியின் துவாரத்தை மூடி
யுத்தத்தை நிறுத்துவதே புத்திசாலித்தனம்'
சத்தியக்கடதாசியில் ஒப்பமிட்டு
தலைவர் அனுப்பிய பின்னரும்
சிங்களப் படைகளின் துப்பாக்கிகளுக்கு
சினம் அடங்கவில்லை.
மணலாற்றில்
புலிகளின் நெஞ்சில் குருதி வழிந்தது.
எங்களின் கடலிலே.. கரைவலை போட்டு
சிறுதிரளி அள்ளக்கூட உரிமைகள் இல்லையா?
கப்பலில் போகிறோம் என்ற திமிரில்தானே
நேற்று, சுட்டுவிட்டுப் போனீர்கள்?
எப்படிப் பொறுப்போம்.

கடற்புலிகளின் கண்கள் சிவந்தன
கரும்புலிகளின்
நெற்றிவிழிகளில் நெருப்புப் பிறந்தது.
பூ என்றும், கொடி என்றும் பாடிய
முன்னைப் புலவரின் உவமைகள்
'நளாயினி' நெருப்பானாள்.
மைபூசிய விழிகளென்றும்,
மெழுகுப் பொம்மையின் மென்மை
சொன்ன கவிஞர்கள் சுருண்டு போ
'மங்கை' புயலானாள்
வாமனும்,லக்ஸ்மனும் பூமிப்பந்தை
மையப் புள்ளியைத் தள்ளி வைத்த
'பிரபாகரன்' வளர்த்த வளர்ப்பு அ
அண்ணன், தங்கைகளுக்கு அள்
சீர்வரிசை என்ன?
துணிவு.
தலைவன்: பிள்ளைகளுக்கு சொல்
வேதம் என்ன?
தெளிவு.
இது கடற்புலிகளின் காலம்.

# “புலிகளின் தாகம் தமி

# கடற் கரும்புலிகள்

## ..காவியம் எழுதிய கடற்புலிகள்



கடற் கரும்புலி
**கப்டன் லக்ஸ்மன்**
நல்லூர்



கடற் கரும்புலி
**கப்டன் வாமன்**
மட்டக்களப்பு

## ..நிறுத்தியிருந்தால்... கப்பலாவது தப்பியிருக்கும்.

..கிப் போனது
..ழுத்து
..டுத்த
..த்த

கரும்புலிகளின் நேரம்.
காமினிக்கு 'ஞானம்' பிறந்ததே உலக அதிசயம்.
'கிழட்டு நரிக்கு'
மீண்டும் பதவி எலும்பின் மீது ஆசை வந்து
வாயில் நீர் வழிகிறது.
சகோதரி சந்திரிகா!
இந்த நேரத்தில் துப்பாக்கியை தூரவைத்து விட்டு
பேச வந்திருந்தால்...
கப்பலாவது தப்பியிருக்குமே!
புல்லை வளைத்து வில்லுக் கட்டி
பொட்டுக் கடலையை அம்பாக்கி வைத்து
சூரியனைச் சுட்டு விழுத்தக்கூடிய வீரர்கள் யார்?
விடுதலைப்புலிகள்.
ஐந்து சமுத்திரங்களும் எழுந்து வந்து
அடங்கிப்போ என்றாலும்
ஆர்ப்பரிக்கும் கடல்களை அள்ளிக் குடித்துவிட்டு
நிமிர்ந்து நின்று சிரிக்கக்கூடிய தலைவன் யார்?
'பிரபாகரன்'.
தெரிந்து கொண்டும் ஏன்தான் சொறிய வருகின்றீர்கள்?
உரிமைக்கானதே எங்கள் போராட்டம்.
இது சிம்மாசனங்களுக்கான இழுபறியல்ல.
மீண்டும் தமிழன் மீசை முறுக்க வேண்டும் என்பதற்காகவே
முன்னேறுகின்றோம்.
இன்று கப்பல் போனது
நாளை என்ன போகுமோ?
கதவுகள் இன்றும் அகலத் திறந்து காத்திருக்கின்றன.
பேச வாருங்கள்.
உரிமைக்கான பேச்சுக்களே உன்னதமானவை.
அடிக்கும் போது திருப்பி அடிப்பதே எங்கள் 'யாப்பு'
அணைக்கும் போது கட்டியணைப்பது எங்கள் போக்கு.
தொட்டவன் கையை வெட்டுவது எங்கள் மரபு.
படைமுகாம்களுக்குச் சொல்லி வையுங்கள்
எம்மைத் தொடவேண்டாம் என்று.
இது,
சகோதரி சந்திரிகாவுக்கு 'சமர்ப்பணம்'.
வரும்போது கையில் தருவதற்கு
பூப்பறிக்க வேண்டும்.
எப்போது பேச வருவீர்கள் என்று
தேதி குறித்து அனுப்புங்கள்.

-புதுவை இரத்தினதுரை-

..ழத்தாயகம்"

தமிழீழ விடுதலைப் புலிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரு தரப்பு பேச்சுவார்த்தை

## (அரசியல் விஞ்ஞான அடிப்படையிலான ஆய்வு)

- பற்றிமாகரன் -

"சிறீலங்கா அரசாங்கம் விடுதலைப்புலிகள் உடன் பேச்சுவார்த்தை". இந்த வசனம் சிறீலங்காவில் புதிய அரசாங்கம், திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா தலைமையில் பதவிக்கு வந்த காலம் முதல் செய்தித்தாள்களில் பரவலாக அடிபடுகின்ற ஒன்று.

### உடன் பேசுதலும் இடம் பேசுதலும்

இங்கு 'உடன்' என்ற சொற்றொடர் அதிமுக்கியமான ஒன்று. ஆங்கிலத்தில் 'Talk to' (இடம் பேசுதல்), 'Talk with' (உடன் பேசுதல்) என்ற சொற்றொடர்களுக்குமிடையே மிக நுணுக்குமான ஆனால், ஆழமான வேறுபாடு உண்டு. (அரசாங்கத்) இடம் பேசுதல் என்கையில், அங்கு பேச்சுக்குப் போபவர் இரண்டாம் நிலையிலும், (அரசாங்கம்) பேசுபவர் முதலாம் நிலையிலும் (Superior) இருப்பர். (அரசாங்கம்) பேசுபவர், பேச்சுக்குப் போபவர் (விடுதலைப் புலிகள்) உடன் பேசுதல் என்கையில் இருதரப்பினருமே சமமானவர்களாகக் கருதப்படுவர்.

தமிழீழ மக்களின் வரலாற்றில், அவர்கள் பிரித்தானியாரிடம் அடிமைப்பட்ட காலம் முதலாக பல பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுள்ளன. டொனமூர் அரசியலமைப்பு உருவாக்க காலத்தில், அத்தகையை அரசியலமைப்பு தமிழர்களது பிரதிநிதித்துவ விகிதாசாரத்தைக் குறைத்து, தமிழர்களை சிறுபான்மையினராக்கிவிடும் என்பதைச் சுட்டிக்காட்டி, பல மகஜர்கள், சாட்சியங்கள் தமிழர்களால் அளிக்கப்பட்டதும் அல்லாமல், 1931 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலை தமிழர்கள் பகிஸ்கரித்து, ஜனநாயக ரீதியிலான முதலாவது செயல்முறை எதிர்ப்பையும் வெளிப்படுத்தினர். தேர்தல் முறை என்பது, 1. பங்களிக்க வைத்தல். 2 பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தல். 3. சட்டத் தன்மையை வழங்குதல். 4. அரசாங்கத்தை உருவாக்குதல் என்ற நான்கு பங்குகளை மக்களுக்கு வழங்கவேண்டும் என்பது ஜனநாயக நியதி. ஆனால், டொனமூர் அரசியலமைப்பால் உருவாக்கப்பட்ட தேர்தல் முறையில் மேற்குறிப்பிட்ட நான்கில், முதல் இரண்டும் தமிழர்களுக்கு மறைமுகமாக மறுக்கப்பட்டதால், தமிழர்களுடைய இறைமைக்கு அது ஊறு விளைவித்தது. அடுத்துள்ள இரண்டும் குடியேற்ற அரசினால் வலுக்கட்டாயமாகத் தமிழர்கள் மேல் திணிக்கப்பட்டது. இவற்றுக்கெதிராகத் தமிழர்கள் எதிர்ப்புத் தெரிவித்து, பிரித்தானிய அரசாங்கத்திடம் மகஜர்கள், சாட்சியங்கள் மூலம் பேச்சு நடாத்தியபோதும், இது 'Talk to' என்ற பாணியிலேயே அமைந்தது. இலங்கைத் தீவினுடைய விடுதலை என்பது பிரித்தானியருடன் மகஜர்முறை பேச்சுவார்த்தைகளுக்கூடாகக் கோரப்பட்டது. அதனால்தான் இலங்கை, அரசியல் திட்ட வளர்ச்சிகளுக்கூடாகச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்ட நாடுகளுக்கு உதாரணமாக்கப்பட்டது. இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் ஒன்று உண்டு. அரசியல் திட்ட வளர்ச்சிகளுக்கு ஊடாக இலங்கைத் தீவு சுதந்திரத்தைநோக்கி முன்னேறியபொழுது, இதில் பங்கெடுக்கக்கூடிய புலமை படைத்த மேல்தட்டு வர்க்கங்களுக்கிடையிலேயே இருந்தது. இதனால், இலங்கைத்தீவின் அரசியலில் நாட்டினங்களான தமிழ் -சிங்கள சாதாரண மக்களுக்கு (Mass) சந்தர்ப்பம் வழங்கப்படாமையினாலேயே உண்மையான சுதந்திரத்தை உருவாக்கமுடியவில்லை. அத்துடன், இத்தகைய அடிப்படையில் உருவாக்கப்பட்ட, 'அந்நியரை வெளியேற்றுதல்' என்ற குறுகிய நோக்கின் அடிப்படையிலான சிங்கள - தமிழ் மக்களிடையிலான 'இலங்கையர் தேசியம்' என்பதும் முற்றிலும் போலியானதும் நிலைத்து நிற்கும் தகுதியற்றதுமான ஒன்றாகத் திகழ்ந்தமை வரலாறு.

### நிபந்தனைக்கு உட்பட்ட இறைமைப் பகிர்வு

அடுத்து சோல்பரி அரசியலமைப்புக் காலத்திலும் தமிழர்கள் 'Talk to' என்ற பாணியில் மகஜர் போராட்டத்தைத் தொடர்ந்தனர். இலங்கைத்தீவுக்கு, சிங்களவரைப் பெரும்பான்மையினராகக் கொண்ட ஒற்றையாட்சி முறையின்கீழ் வழங்கப்படும் சனத்தொகை அடிப்படையிலான தேர்தல் முறைமைக்கூடான சுதந்திரம், தமிழர்களை அரசியல் அனாதைகளாக்கிவிடும் என்ற அச்சம் இக்காலகட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டது. ஆயினும், இங்கு அதிமுக்கியமான ஒரு சம்பவம் இடம்பெற்றது. அன்று, சிங்களத் தேசியத்தின் தலைவராகக் கருதப்பட்ட டி. எஸ். சேனநாயக்கா, தமிழர்களிடம் இலங்கைத்தீவுக்கு பிரித்தானியர் சுதந்திரம் வழங்குவதைத் தடைசெய்ய வேண்டாம்; தனது தலைமையிலான இலங்கைத்தீவின் அரசாங்கம் தமிழர்களுடைய அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்துவைக்கும் எனப் பகிரங்கப்படுத்தினார். இதன்மூலம் நவீன அரசான (Modern State) சுதந்திர இலங்கை அரசின் உருவாக்கத்தில், தமிழர்கள், சிங்களவர்களுடன் இறைமைப்பகிர்வை 'நிபந்தனையுடன்' ஏற்படுத்தினார்களே ஒழிய, இறைமை ஒன்றிப்புக்கு உட்படவில்லை. இந்த 'நிபந்தனைக்குட்பட்ட' இறைமைப்பகிர்வு இன்றைய நவீன அரசுக்கள் பலவற்றிடம் காணப்படும் ஒன்று. இதனால்தான், "இன்றைய நவீன அரசுக்களிடம் முற்றுமுழுதாக இறைமை / மேலாதிக்கம் என்பது செயல்முறையில் இல்லை. அவற்றின் இறைமை, அவ்வரசில் உள்ள தேசிய இனங்களின் 'சுயநிர்ணய உரிமையினால்' கட்டுப்படுத்தப் படுகின்றது", என்ற கூற்று இலங்கை அரசுக்கு முற்றுமுழுதாகப் பொருந்துகின்றது. ஆகவே தமிழர்களின் சுயநிர்ணய உரிமை என்பது, புதிதாக வரையறுத்து உருவாக்கப்படவேண்டிய ஒன்றல்ல; வரலாற்றுக்கு முன்பிருந்தே தொடருகின்ற பண்பு என்பது நிரூபணமாகிறது. ஆயினும், 'Talk to' பாணியிலான பேச்சுவார்த்தைகள் ஒரு பக்க முனைப்புள்ளவையாக (Unilateral) அமைகின்றன. இது தமிழர்களிடையே, அரசிடம் கேட்டுப்பெறுதல் என்ற எண்ணத்தை உருவாக்கி விடுகின்றது. இதனால், தமிழர்கள் தமக்கு இயல்பாகவே இருக்க வேண்டிய உரிமைகள் மறுக்கப்பட்டபோது தாமாகவே அந்த உரிமைகளை நிலை நாட்டாமல், இலங்கைத்தீவின் ஆட்சியாளர்களிடம் 'கேட்டுப்பெறுவோம்' என்ற அடிமை மனோநிலையை வளர்த்துக்கொண்டனர்.

### பேச்சுவார்த்தைகளும் தமிழ்த் தலைமைகளும்

இந்த அடிப்படையிலேயே பண்டாரநாயக்கா -செல்வநாயகம் பேச்சுவார்த்தைகள், டட்லி சேனநாயக்கா -செல்வநாயகம் பேச்சுவார்த்தைகள், சிறிமாவோ பண்டாரநாயக்கா -செல்வநாயகம் பேச்சுவார்த்தைகள் என்பன நடைபெற்றன. இங்கு தமிழர்கள் தாமாகவே 'Talk to' என்ற நிலையை உருவாக்கிக் கொண்டதினால், சிங்கள அரசு மேலாதிக்கமுள்ள ஒரு பக்கப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியது. அப்பேச்சுவார்த்தைகள் சரியான அடித்தளத்தில் ஆரம்பமாகாததினால், அவற்றின் விளைவுகளும் எப்பொழுதும் சிங்கள அரசுகளுக்கே சாதகமாக அமைந்தன. தமிழ்த் தலைமைகள், வெறுமனே "ஏமாற்றிவிட்டார்கள்" என்ற இலக்கியச் சொல்லுள் ஒளிந்து கொண்டன. ஆனால் ஏமாற்றினால், என்ன எதிர்விளைவுகள் தமிழர்களால் தோற்றுவிக்கப்படலாம் என்பதை சிந்திக்கவோ, செயற்படுத்தவோ சாதாரண மக்களிலிருந்து (Tamil mass) உருவாகாத தமிழ்த் தலைமைகளால் இயலாமற்போனதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை. தமிழர்களின் தலைமைத்துவ அதிகாரத்தைத் தம்மிடையே வைத்துக்கொள்வதையே செயல்முறைச் சாத்தியமாகக்கொண்ட தமிழ்த் தலைமைகள், சொல்லளவில் விடுதலையையும், செயலளவில் அடிமை நிலையையும் ஏற்றவர்களாகக் காணப்பட்டன. இதனால்தான், 'தமிழரசு' என்ற பெயரைத் தாங்கிய கட்சியின் அமைச்சராக இருந்த மு. திருச்செல்வத்தின் காலத்திலேயே கிழக்கு மாகாணத்தின் சிங்களக் குடியேற்றங்கள் பூரணத்துவப்படுத்தப்பட்டு, சிங்கள அரசு 'கிழக்கை சிங்களக் குடியேற்றமாக' மாற்றியது. அதேபோல், அடையாள அட்டை மசோதா இக்காலத்திலேயே நிறைவேற்றப்பட்டு, சிங்கள இனவழிப்புக் கொள்கைக்கு தமிழர்களை இலகுவில் இனம்காணக்கூடிய சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது. பேச்சுவார்த்தையின் அடித்தளம் சரியும்பொழுது, தமிழர்களுக்கு சில பதவிகளும் அப்பதவிகளுக்கூடாகத் தமிழர்களை மேலும் அடிமை கொள்வதுமே, சிங்கள அரசுக்களால் வழங்கப்பட்டன என்ற வரலாற்று உண்மையைச் சுட்டிக்காட்டவேண்டிய தேவை இருப்பதினாலேயே, இவற்றை இவ்விடத்தில் எழுத முனைந்தேன்.

இவ்விதம் சிங்கள அரசுக்களுடன், பேச்சுவார்த்தை நடாத்த அரசியல் திராணியற்ற நிலைக்கு ஆளான தமிழ்த் தலைமைகள், இயல்பாகவே தமிழ் மக்களிடையே உருவான தமிழ்த் தேசியத்துவ உந்துதலுக்கு, இந்தியத் தமிழ் மக்களின் இனவழி உறவும் உதவும் என்ற நம்பிக்கையை ஊட்டத் தொடங்கின. இதனை நன்கு இனங்கண்டுகொண்ட இந்திய மத்திய அரசு, தனது ஆதிக்க விஸ்தரிப்பு நோக்குக்கு இதனைச் சாதகமாகக் கையாளத் தொடங்கியது.

இங்கு ஒரு வரலாற்றுச் சம்பவத்தையும் எடுத்து நோக்கவேண்டும். நேருவின் தலைமையிலான இந்திய அரசு, மலையக மக்களுக்கு அரசுநோக்கிய அரசு உரிமை (De Facto) உண்டு; அது சட்டரீதியான அரசு உரிமையாக (De Jure) மாற்றப்பட வேண்டும் என பிரித்தானியரிடம் சுதந்திரத்திற்கு முன்பிருந்து வலியுறுத்தி வந்த ஒரு காலகட்டத்தில், இலங்கை -இந்தியக் கடல் எல்லைகள் ஒன்றோடொன்று பொருந்துகின்ற எல்லைவகுப்புச் சிக்கல்கள் தோன்றியதும், சிங்களப் பெரும்பான்மையுடன் அணைந்துசெல்லவேண்டிய தேவை ஏற்பட்டதனால், மலையக மக்களின் சார்பாகக் குரலெழுப்பும் பணியை முற்றாக நிறுத்திக்கொண்டது. அது மட்டுமல்ல, இந்திய வம்சாவழி உரிமையுள்ள மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டபோதுகூட, அதனை ஐக்கிய நாடுகள் சபைக்குக் கொண்டுசெல்லாது, தனது ஆதிக்கநலனுக்கு முக்கியத்துவம் கொடுத்தது.

### தமிழர் மீதான இந்தியாவின் மேலாதிக்கம்

இதே இந்தியாவைத்தான், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வாளராகத் தமிழ்த் தலைமைகள் எழுபதுகளின் நடுப்பகுதியில் கருதினர். இச்சூழலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய இந்தியா, தமிழீழ மக்களின் ஆயுதப் போராட்டத்துக்கு புகலிட உதவி அளித்தல், தமிழ் அகதிகளுக்குத் தங்கிட உதவி அளித்தல் என்ற போர்வையில், 'அரசியல் ஒட்டகமாக' தமிழீழ விடுதலைக் கூடாரத்துக்குள் நுழைந்து கொண்டது. இதன்பின்னணியில், திம்புப் பேச்சுவார்த்தை உருவாக்கப்பட்டதினால், இங்கு இந்தியா தன்னை மேலாதிக்க நெறியாளராகக் காட்டிக்கொண்டது. சிறீலங்கா அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன், தான் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கூடாக மறைமுகப் பேச்சுவார்த்தை நடாத்துவதின் மூலம் தனது நோக்கிலான ஒரு தீர்வை ஏற்படுத்தலாம் என்பதே இந்திய அரசின் நோக்காக இருந்தது. ஆகவே, இப்பேச்சுவார்த்தை சிறீலங்கா அரசுக்குத் தனதுபோக்கை வலுப்படுத்தும் ஊடகமாக அமைந்ததில் வியப்பில்லை. இதன் பின்னர், ஒட்டகத்துக்கு இடம் கொடுத்தவன் கதையாகத் தமிழீழப் பிரதேசத்தில், இராணுவரீதியிலான மேலாண்மையை நிலைநாட்ட முயன்ற இந்தியா, சிறீலங்கா அரசுடன் தனது பிராந்திய மேலாண்மைக்கு வலுவூட்டக்கூடிய ஒப்பந்தம் ஒன்றை 'ராஜீவ் -ஜே. ஆர்.' ஊடாகச் செய்துகொண்டது. இந்த ஒப்பந்தம் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில், தமிழீழ மக்களின் தேசியப் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு, சிறீலங்கா -இந்திய அரசுக்கள் எவ்வித முக்கியத்துவமும் கொடுக்காமல், தமிழீழ மக்கள்மேல் 'ஒப்பந்தத்திணிப்பு' ஒன்றை ஏற்படுத்தினர். இருந்தபோதிலும், ஒப்பந்தத்தின் ஆரம்பச் செயற்பாடுகளுக்குத் தமிழீழத்தில் அனுமதி வழங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள், அதன் மூலம் தம்மைச் சமாதானத்தின் எதிரிகள் அல்ல, என்பதை நிறுவினர். ஆயினும், இந்திய அரசின் உண்மை நோக்கு உலகுக்கு வெளிப்படத் தொடங்கியதும், தமிழீழ மண்ணை அவர்களிடம் இருந்தும் காப்பாற்றவேண்டிய கடமை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது. அதுவே, ஆயுத எதிர்ப்பை மீளவும் தொடங்க நிர்ப்பந்தித்தது.

### விடுதலைப் புலிகளுடன் பிரேமதாசவின் பேச்சுவார்த்தை

இதனையடுத்து, சிறீலங்காவின் அப்போதைய பிரதமராக இருந்த பிரேமதாசா, இந்திய இராணுவ மேலாண்மையை இலங்கைத்தீவில் இருந்து அகற்றுவதற்கு வழிதெரியாமல் தவித்த நேரத்தில், விடுதலைப் புலிகள் 'உடன்' பேச்சுவார்த்தை செய்வதன் மூலமே அதனைச் சாத்தியமாக்கலாம் என்ற உள்நோக்கோடு, வெளிப்போக்கில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினார். இதுபற்றி 'மைக்மூர்' போன்ற அரசியல் விஞ்ஞான அறிஞர்கள் குறிப்பிடுகையில், இங்கு விடுதலைப் புலிகளைப் பிரேமதாசா, அரசுநோக்கிய அரசின் பங்காளராகக் கருதினார். (De Facto Alliance) எனக் கூறியுள்ளனர். இப்பேச்சுவார்த்தை சிறீலங்காவின் இராணுவத் தலைமைகளின் செயல்களினால், இறுக்கநிலைக்குப் போய், பிரேமதாசா தனது போக்கை மாற்றி, மீளவும் பௌத்த -சிங்களப் பேரினவாதத்தின் ஆக்கிரமிப்புப் போரை முடுக்கி விட்டார். ஆனால், இப்பேச்சுவார்த்தையே முதன்முதலில் 'Talk with' என்ற நிலையில், சிங்கள அரசுக்கும் தமிழர்களுக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தை என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இதுவரை, பேச்சுவார்த்தை முறிவுற்றால், தமிழர்கள் அதற்கு என்ன எதிர் விளைவை ஏற்படுத்துவார்கள் என்ற, அச்சம் ஏதுமின்றி சிறீலங்கா இயங்கியது. ஆனால் இப்பேச்சுவார்த்தையினை அடுத்து, இருதரப்புக்கும் பேச்சுவார்த்தை முறிவினால் எதிர் விளைவுகள் ஏற்படும் என்பது உறுதி செய்யப்பட்டது.

### விடுதலைப் புலிகளுடன் புதிய அரசின் பேச்சுவார்த்தை

இந்நிலையில், தற்போது சிறீலங்காவின் புதிய அரசு 'பேச்சுவார்த்தை' பற்றிப் பேசத்தொடங்கியுள்ளது. இதில், சிறீலங்கா அரசிற்கு உள்ள உள்நோக்கங்கள் ஒருபுறமிருக்க, மறுபுறத்தில், சர்வதேசரீதியிலான ஒரு தேவையும் உண்டு. இன்று ஐரோப்பா உட்பட, மேற்கத்திய அரசுகளுக்கிடையே தாராண்மைவாதம், ஜனநாயக தாராண்மைவாதம் (Literal Democratic), சமூக தாராண்மைவாதம் (Social Democratic) என்ற வடிவில் வெளிப்பட்டுள்ளது. பொதுவுடமை (Communism) நிலைகுலைந்துபோயுள்ள இன்றைய நிலையில், தன்னை இடதுசாரிப் போக்கான கட்சி எனக்கூறிவந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி, தனது வழமையான இடதுசாரி ஆதரவுப் பாதைக்கும், மேற்கத்திய பாதைக்கும் இடையே தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்வதற்கு ஜனநாயக தாராண்மைவாதத்தைக் கைக்கொள்ளவேண்டிய நிலைதோன்றியுள்ளது. இதுவே, புதிய அரசாங்கம்

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறு கதை

# பாதுகாப்பு

மலரன்னை

இருட்போர்வையால் மூடப்பட்டிருந்த அந்தப் பிரதேசத்தின் அமைதியை ஒரு குண்டுச் சத்தம் குலைத்ததைத் தொடர்ந்து, பகலைப் பிரதிபலிப்பது போன்றதொரு வெளிச்சம் வான்பரப்பில் பரவுகிறது

ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்து போயிருந்த அன்னம்மாவைக் குண்டுச் சத்தம் துயிலெழுப்பிவிடவே திடுக்கிட்டு எழும்பியவள், யன்னலினூடே தெரிந்த வெளிச்சத்தைக் கண்டு ஒரு கணம் பதறிப்போனாள்.

தொடர்ந்து வேட்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. வாரிச் சுருட்டிக் கொண்டு படுக்கையை விட்டு எழும்பியவள், கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். வந்தவள் முற்றத்தில் இறங்கி நின்று கொண்டு சுற்று முற்றும் ஒரு தரம் நோட்டம் விட்டாள்.

இடையிடையே குண்டுச் சத்தங்களும் கேட்டுக் கொண்டே இருந்தன. கடற்பீரங்கி வேறு கரையை நோக்கிக் குண்டுகளை ஏவிக் கொண்டிருந்தது. அதன் சத்தம் அவளது செவிப்பறையை அதிர வைத்துக் கொண்டிருந்தது.

"ஏதோ பிரச்சினை போல கிடக்குது. எக்கணம் கண்மூடித்தனமாய் செல் அடிக்கப் போறாங்கள். எதுக்கும் ஆஸ்பத்திரியடிக்குப் போட்டால் நல்லது".

தனக்குள் சொல்லிக் கொண்டே வீட்டைப் பூட்டிக் கொண்டு யாழ் நகரை நோக்கிப் புறப்பட்டு விட்டாள் அன்னம்மா. அவளது கையில் ஒரு கைப்பை இருந்தது. அதற்குள் சில முக்கியமான பொருள்களையும், இரண்டொரு துணிமணிகளையும் திணித்திருந்தாள்.

அன்னம்மாவுக்கு எப்போதுமே தன்னைப் பற்றி ஒரு பெருமிதமான அபிப்பிராயம். சாதுர்யமாகச் செயற்படுவதில் தன்னை மிஞ்சியவர்கள் கிடையாது எனக் கணக்குப் போட்டு வைத்திருந்தாள் அவள்.

கொட்டடியில் இருந்து நகருக்குப் போகும் வீதியால் அவள் எட்டி நடை போட்டுக் கொண்டிருந்தாள். இன்னும் அவளைப் போலவே பலதரப்பட்ட மக்களும் சைக்கிள்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும், நடையுமாகப் போய்க் கொண்டிருந்தனர். தூக்க கலக்கத்திலிருந்து மீளாத இளசுகளின் அழு குரல்களினாலும், பீதியுற்ற மக்களின் அவலக் குரல்களினாலும் அந்த தெருவே அல்லோலகல்லோலப்பட்டது.

பாதுகாப்பு வலயமெனக் குறியீடிட்ட பிரதேசத்துக்குள் வந்தபின் தான் அன்னம்மா சற்று நடையைத் தளர்த்தினாள். மக்கள் எல்லோருமே யாழ் போதனா வைத்தியசாலையைச் சூழவுள்ள பிரதேசங்களுக்குள் தற்காலிக தங்குமிடத்தைத் தேடிக்கொள்ள முற்பட்டனர்.

பழைய பஸ்தரிப்புக்கு முன்னால் அமைந்திருந்த ஒரு மாடிக் கட்டடத்தின் முன் பக்கத்தை அன்னம்மா தெரிவு செய்து கொண்டாள். தனது கைப்பையைத் திறந்து ஒரு துண்டை எடுத்தவள், அதனாலேயே அந்தச் சீமெந்துத் தரையில் கிடந்த மண்ணைத் தட்டி விட்டு, அதே துணியை நிலத்தில் விரித்தாள். கைப்பையைத் தலைக்கு அணையாக வைத்துக் கொண்டு அந்த இடத்தில் நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டாள்.

'ம். . . . .'

நிம்மதிப் பெருமூச்சொன்றை வெளிப்படுத்தியவளுக்குத் தனது கணவன் கொழும்பில் கடை வைத்திருந்த காலம் நினைவுக்கு வந்தது. அதைத் தொடர்ந்து தானும் பிள்ளைகளுமாகப் புகைவண்டியில் கொழும்பிற்குப் பயணம் செய்த காலமும், தான் புகைவண்டியில் ஏறியவுடனேயே அவசரமாக இடம் பிடித்துப் பிள்ளைகளையும் படுக்க வைத்து விடும் சாதுர்யத்தையும் நினைவில் மீட்டுக் கொண்டாள்.

அருகில் ஆளரவம் கேட்டு அவளது சிந்தனை கலைந்தது.

'ஆச்சி!'

பெண் குரல் ஒன்று கேட்டது. தலையைச் சற்று உயர்த்தியவள் 'ஆரது?' என்றாள். இருளாக இருந்தாலும் உருவங்களை இனங்காணக் கூடிய ஒரு வெளிப்பு இருந்தது.

'ஆச்சி! என்னையும் இந்தப் பிள்ளையையும் உந்தச் சுவர்க்கரையில் படுக்க விடுறியளே! பிள்ளைக்கு நல்ல தடிமல். காத்துப்பட்டாக் கூடாது. அது தான். . . . '

மெதுவாக இழுத்தாள், அந்தப் பெண். அன்னம்மாவுக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்துவிட்டது. நறுக்கெனப் பதில் சொன்னாள்.

'நானும் வருத்தக்காரி தான். நீ வேணுமெண்டால் வேறை இடம்பார்த்துக் கொள்'

ஆண் குரலொன்று அவளை அழைத்தது.

'வாரும் தமயந்தி, நாங்கள் அங்காலை போய்ப் பாப்பம் வசதியான இடம் ஏதும் இருக்கும்'

அவர்கள் தேடிய வசதியான இடம் என்ன கட்டில் மெத்தையா? வெறும் கட்டிடங்களின் முகப்புத் தரையைத்தான் அவர்கள் தேடிப் போய்க் கொண்டிருந்தனர். அந்தப் பெண் தமயந்தியின் கையிலிருந்த இரண்டு மாதங் கூட நிரம்பாத குழந்தை இடைக்கிடை வீறிட்டு அழுது கொண்டிருந்தது.

## பாதுகாப்புத்தேடி, பாதுகாப்பு வலயத்திற்குள் சென்று படுத்துக்கொண்டாள் அன்னம்மா.

அவர்கள் அப்பாற் போனதும் அன்னம்மா சரிந்து படுத்துக் கொண்டாள். அவளது அடி மனதில் இனம் புரியாத ஒரு நெருடல் தோன்றத்தான் செய்தது. அவளது எண்ணங்களோ அவளை முந்திக் கொண்டுவிட்டன.

'என்ரை மகள் பிரேமாவையும் இஞ்சையே வைச்சிருந்தால், அவளும் இப்பிடித்தான் பிள்ளை குட்டியளையும் இழுத்துக் கொண்டு ஓடித் திரிய வேண்டி இருந்திருக்கும். நல்ல காலம் அவளை ஒரு மாதிரிக் கனடா மாப்பிள்ளைக்குக் கட்டிக் குடுத்ததால, அவள் அங்கை போய் நிம்மதியாய்க் குடித்தனம் நடத்துகிறாள். நான் தான் கிடந்ததெல்லாத்தையும் வித்துக் குடுத்திட்டு ஓட்டாண்டியாய்ப் போனன். ம்!. . . . பிள்ளையள் நல்லாயிருந்தாக் காணும் எனக்கென்னத்துக்குப் பொருளும் பண்டமும். நான் ஒரு சீவன் தானே. எப்பிடியும் சீவிச்சுக் கொள்ளுவன். நான் தனி ஆளாய் இருந்தபடியாத்தானே ஓடிவந்து ஒரு ஒதுக்குப்புறமாய், நல்ல பாதுகாப்பான இடமாப் பாத்துப் பிடிச்சுக் கொண்டன். இனி இதிலை நிம்மதியாய்க் கிடந்திட்டு விடிய எழும்பிப் போகலாம்'

ஏதோ, தான் படுத்திருக்கும் இடத்தை தானே சொந்தமாக வாங்கி விட்டது போன்றதொரு நினைப்பில் அன்னம்மா மிதந்தாள். குண்டுச் சத்தங்களின் அதிர்வுகளும் வேட்டுக்களும் கேட்டவண்ணமிருந்தன. அவள் தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

'மண்டை தீவால ஆமி வெளிக்கிட்டாலும் இஞ்சை வந்து கொள்ளமாட்டான், இது பாதுகாப்பு வலயமெல்லே. அதோடை பெடியளும் விடமாட்டாங்கள்'

பெடியளை நினைத்ததும் அவளுக்குத் தனது பிள்ளைகளின் நினைவு வந்துவிட்டது. மூத்தவன் சுதன், சுவிஸ் நாட்டில், அங்கேயே, தான் விரும்பிய ஒரு பெண்ணைத் திருமணஞ் செய்து குடியும் குடித்தனமுமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவன் தாயையோ, தாய் நாட்டையோ நினைப்பதுமில்லை. திரும்பிப் பார்ப்பதுமில்லை. இளையவன் சுரேஸ், கனடாவில் அகதி அந்தஸ்த்துடன் அவனது காலம் போகிறது. அவன் தான் இடைக்கிடை அன்னம்மாவிற்கு ஏதும் பணம் அனுப்பிக் கொள்வதுண்டு. அத்துடன் தங்கை பிறேமாவையும் தன்னுடன் கூட அகதியாய்த் தங்கி இருக்கும் ஒரு பையனுக்கு திருமணம் செய்து கொடுப்பதில் மும்முரமாய் இருந்து செயற்பட்டவன். அவன் மேல் எப்போதும் அன்னம்மாவுக்கு ஒரு தனிப்பாசம் நிலைத்திருக்கிறது என்பது அவளது பேச்சிலிருந்து தெளிவாகிய விடயம்.

'சுரேசுக்கும் நல்ல ஒரு பெட்டையாய்ப் பார்த்துக் கலியாணஞ் செய்து வைச்சிட்டனென்டால் நிம்மதியாய்க் கண்ணை மூடலாம், அவனுக்குப் பொம்பிளை அனுப்புற சாட்டிலை நானும் ஒருக்கால் கொழும்புக்குப் போய் சுரேசனோடை கதைச்சுப் போட்டு வரலாம். அல்லது அவனைக் கொழும்புக்கே கூப்பிட்டுக் கலியாணத்தைச் செய்து அனுப்பிப் போட்டும் வரலாம்.

அன்னம்மாவின் கற்பனையில் சுரேசுக்குப் பொருத்தமான பெண்பிள்ளையைத் தேடும் முயற்சி மும்முரமாய் நடந்து கொண்டிருந்தது. ஊருக்குள் இருக்கும் பெண்கள் ஒருவரும் அவளது மனதிற்குப் பிடித்தமானவர்களாய்த் தோன்றவில்லை. புரோக்கர் மாரிட்டைச் சொல்லித்தான் பார்க்க வேணும். அழகு, குணம், பணவசதி எல்லாம் பொருந்தி




வரவேணுமே என்ற சிந்தனையுடன் தூக்கத்தின் பிடியில் சிக்கிக் கொண்டாள்.

கூய்ங்ஸ். . . . . .

கூவியவாறு வந்த 'செல்' எழுப்பிய ஒலி தூக்கத்திலிருந்த அன்னம்மாவின் காதுகளுக்கு எட்டியதோ! இல்லையோ! யார் கண்டது. ?

பேரிடியைத் தொடர்ந்து எங்கும் புகை மண்டலம், கந்தக நெடியும், புகையும் பாதுகாப்புப் பிரதேசத்தில் பதுங்கியிருந்த மக்களின் நாசிகளையும், கண்களையும் ஊடறுத்துத் தாக்கிப் பெரும் எரிச்சலையும் நமைச்சலையும் உண்டு பண்ணின.

## பாதுகாப்பு வலயத்திற்குள் விழுந்து வெடித்த 'செல்' தூக்கத்திலிருந்த அன்னம்மாவை நிரந்தரமாகவே தூங்க வைத்துவிட்டது.

மக்களின் அவலக் குரல்கள் அந்த இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு வெளிவந்த போது. . . . . . . . .

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பொறுப்பதிகாரியின் கை 'வயர்லெஸ்' ஐ இயக்கிக் கொண்டிருந்தது.

தலைமைச் செயலகத்துடன் தொடர்பு.

அங்கிருந்து கூட்டுப்படைத் தலைமையகத்துடன் தொடர்பு.

மீண்டும் அங்கிருந்து பலாலி இராணுவ முகாமுடன் தொடர்பு.

இறுதியாக மண்டைதீவு இராணுவ முகாமுடன் தொடர்பு.

வருத்தம் தெரிவித்தலும் வாக்குறுதிகளும் பரிமாற்றம்.

இப்படியான தொடர்புகள் ஒரு புறம். மறு புறத்தில். . . . . .

யாழ். பழைய பஸ் தரிப்பு நிலையத்தில் விழுந்த செல் வெடித்துச் சிதறியதால் அந்த இடத்தைச் சூழவுள்ள பகுதிகளில் தஞ்சமடைந்த மக்களிற் சிலர் கொல்லப்பட்டும், பலர் காயமடைந்தும் இரத்தக் களரியில் நீந்திக் கொண்டிருக்கின்றனர்.

யாழ். போதனா வைத்தியசாலை உயிர் காக்கும் பணியில் சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அங்கு கடமையில் ஈடுபட்டிருக்கும் டாக்டர்கள், நர்ஸ்கள், ஊழியர்கள் என்று எல்லோரும் ஓடியாடிப் பணிபுரிந்து கொண்டிருக்கின்றனர்.

அந்த அவலமான இரவு விடிந்த போது . . . . . . . . . . .

சைக்கிள் ஒன்று கொட்டடியை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது. அதில் பயணித்தவர்கள் இன்னும் ஏக்கத்திலிருந்து முற்றாக விடுபடாத நிலையில் போய்க் கொண்டிருக்கிறார்கள். கைக்குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு பாரில் அமர்ந்திருந்த தமயந்தி கூறினாள்,

"நல்ல காலம், அந்த மனுசி எங்களுக்கு இடம் விட்டுத் தரமாட்டனெண்டபடியால் தானே நாங்கள் அங்கால போக வேண்டி வந்தது. இல்லையெண்டால் நாங்களும் அந்த இடத்திலையே செத்தோ, காயப்பட்டோ கிடந்திருப்பம்"

"தமயந்தி! அந்த மனுசி உடனேயே செத்துப் போச்சுதாம். கணக்காய் செல் துண்டு வந்து அந்த மேல்மாடி பிளேட்டில பட்டுத் தெறிச்சு மனுசிக்குப்பட்டிருக்கு. நீர் அதிலை பிள்ளையையும்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியல் தீர்வுக்கு சிங்கள...

ரீதியாக பிரதேச சுயாட்சி வழங்கப்படுமானால், இந்த அதிகாரங்கள் அங்கீகரிக்கப்பட்டு -அரசியலமைப்பிலும் பொறிக்கப்படுமானால் எமது நிலைப்பாட்டில் மாற்றத்தைக்கொண்டுவர முடியும்.

## கொழும்பு வரமுடியாத காரணம்

புதிய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு, புலிகளின் பிரதிநிதிகள் கொழும்புக்கு வரமுடியாமல் இருப்பதற்குப் பாதுகாப்பே காரணமாகும். கொழும்பிலே இரு அரசாங்கங்கள் இருக்கின்றன. நாட்டின் ஜனாதிபதியாக, ஐக்கிய தேசியக் கட்சியின் டி. பி. விஜேதுங்கா இருக்கின்றார். பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் பிரதமராக சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா இருக்கின்றார்.

பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு, ஜனாதிபதியிடமே இருக்கின்றது. எனவே, எமது பாதுகாப்புக்கு பிரதமரினால் உத்தரவாதமளிக்க முடியாது. இதன் காரணத்தினால்தான், நாங்கள் பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்த, பிரதமரை அல்லது அவரின் பிரதிநிதிகளை யாழ்ப்பாணத்துக்கு வருமாறு அழைக்கின்றோம்.

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல், முக்கியத்துவம் வாய்ந்தது. பிரதமர் சந்திரிகாவுக்கு வரையறைகள், மட்டுப்பாடுகள் இருக்கின்றன. பாராளுமன்றத்தில் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவிலேயே அவரது அரசாங்கம் தங்கியிருக்கின்றது. நாம் பேச்சுவார்த்தை நடாத்தி, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு, கொழும்பில் உறுதியான அரசொன்று இருக்கவேண்டியது அவசியமாகும். ஆக்கபூர்வமான அரசியலமைப்பு மாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கின்றது. ஆனால், அரசாங்கத்திடமிருந்து எந்தவிதமான உருப்படியான யோசனைத் திட்டங்களும் எமக்கு வந்ததாக இல்லை. அரசாங்கம் கணிசமானளவு யோசனைத் திட்டத்துடன் வரட்டும். நாம் அதற்குப் பதிலளித்து பரிசீலனைக்கு எடுக்கவும் தயார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான, சமாதான முயற்சிகளுக்கு இராணுவத்திடமிருந்தும், தெற்கில் உள்ள பேரினவாதப் பிரிவினரிடமிருந்தும் பிரச்சினைகள் வரக்கூடும். ஆனால், சமாதானப் பாதையில் நடைபோடுவதற்கான மனவுறுதியை, சந்திரிகா வெளிப்படுத்தியிருக்கின்றார்.

போருக்கு முடிவு கட்டுவதற்கான ஆணையை, அவர் மக்களிடம் இருந்து பெற்றிருக்கின்றார். சமாதானம் ஏற்படவேண்டுமென்பதற்காகவே பொதுத்தேர்தலில் சிங்களவர்களில் பெரும்பான்மையினர்கூட வாக்களித்திருக்கின்றார்கள்.

## பிரேமதாசாவுடன் பேசியது

### வீண்கால விரயம்

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசாங்கத்துடன், நாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஒரு வீண்காலவிரயமே. நாம் இருவருடகாலம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். அதனால், இறுதியில் எந்தவிதமான உருப்படியான யோசனைகளுமே முன்வைக்கப்படவில்லை. எமது மக்களின் எந்தப் பிரச்சினையுமே தீர்க்கப்பட்டதாகவும் இல்லை. இது ஒரு அர்த்தமற்ற காரியமாகவே அமைந்தது. நாம்தான் பேச்சுவார்த்தையை முறித்துக்கொண்டதாகவும், அவருக்குத் துரோகம் செய்துவிட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

சமாதானப் பாதையில் இருந்து நாம் விலகிச்செல்லவில்லை என்பதையும், எவருக்கும் நாம் துரோகம் செய்யவில்லை என்பதையும் உலகுக்கு உணர்த்துதலில், நாம் மிகுந்த அக்கறையுடனேயே இருக்கின்றோம். அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையில் அக்கறையுடன் இருக்கும்வரை, உருப்படியான யோசனைகளை முன்வைக்கும் வரை நாம் அவற்றை பரிசீலிக்கத் தயாராகவே இருக்கின்றோம்.

## சந்திரிகாவின்

### முற்போக்குச் சிந்தனை

சிங்களத் தேசியவாதத்தின் தந்தையான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவினதும், தமிழர்களுக்கு எதிரான பல சட்டங்களைக்கொண்டு வந்தவரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவினதும், புதல்வியாக சந்திரிகா இருக்கின்றபோதிலும், நாங்கள் அவரை முற்போக்குச் சிந்தனைகொண்ட தாராளவாதியாகவே காண்கின்றோம். அவலத்திற்குள்ளாகியிருக்கும் தமிழ் மக்கள்மீது, சந்திரிகா அக்கறையை வெளிப்படுத்தி, அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முன்வந்திருக்கின்றார். அவரின் இந்த நல்லெண்ணத்துக்கு அனுசரணையாக நடந்துகொள்வதில், நாம் அக்கறை கொண்டுள்ளோம்.

## தலைவர் பிரபாகரன்

### படை வாபஸைக் கோரவில்லை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், போர் நிறுத்தத்தைக் கோருகிறாரே தவிர, படையை வாபஸ் பெறுமாறு கேட்கவில்லை. இதற்கு இராணுவத் தலைமைப்பீடம் சாதகமாகப் பதிலளிக்கவில்லை.

மக்கள் பாதுகாப்பாகப் பயணம் செய்வதற்கு ஏற்பாடு செய்வதும், ஒரு முக்கிய அம்சமாகும். கேந்திர முக்கியத்துவ, தந்திரோபாயம் காரணமாகவே ஆனையிறவுப் பாதை திறக்கப்படுவதற்கு இணங்க புலிகள் மறுக்கின்றார்கள்.

இப்பாதையைப் பயன்படுத்தி, இராணுவம் குடாநாட்டுக்குள் பிரவேசிக்கலாம். இதன் காரணத்தினாலேயே, பிரயாணிகளுக்கு குறைந்தபட்ச அசௌகரியங்களுடனான சங்குப்பிட்டி - கேரதீவுப் பாதையைத் திறக்க வேண்டும் என்று புலிகள் வலியுறுத்தி நிற்கின்றார்கள். இப்பாதையைப் பயன்படுத்துவதாக இருந்தாலும், பூநகரியில் உள்ள இராணுவ முகாமை அகற்றவேண்டும்; மக்கள் மீது எந்தச் சோதனையும் நடாத்தப்படக்கூடாது" என்றும் கூறினார். ■

# வீதியோர மரங்களால்...

பாதிப்படையும் நிலை தோன்றியுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் வீதியோர மரநடுகைத் திட்டம், காடுவளர்ப்புத் திட்டம் என்பனவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் நடுகை மேற்கொள்ளப்பட்டு, மரங்களைப் பாதுகாப்பதற்கென அமைக்கப்பட்ட கூடுகளை, விறகுக்காகவும் வேறு தேவைக்காகவும் பிடுங்குதல், கூடுகளில் மிதிவண்டிகள் போன்றவற்றை சாத்துதல், அதில் கால்நடைகளைக் கட்டி மேயவிடுதல் போன்ற நடவடிக்கைகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகள் மூலம் மரம்நடுகைத் திட்டங்கள் பெரும் பாதிப்படையும் நிலையுள்ளது. எனவே, எதிர்கால நன்மை கருதி வீதியோர மரங்களைச் சுற்றியுள்ள வேலிகளைப் பராமரிக்க, ஒத்துழைப்புத் தருமாறு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் பொதுமக்களிடம் கேட்டுள்ளனர். ■

# அச்சுவேலியில்...

வானூர்திகள் தாக்குதலை கண்மூடித்தனமான முறையில் நிகழ்த்தின. இச்சம்பவத்தில், பிரயாணிகளுடன் பயணம் செய்துகொண்டிருந்த இரண்டு மினிபஸ்களும் சிக்கிக்கொண்டதாகத் தெரியவருகின்றது. அத்துடன், அச்சுவேலியில் பல வீடுகள், பொது நிறுவனங்கள் பலத்த சேதமடைந்ததாகவும் அறியப்படுகின்றது. இக்கொடூரமான தாக்குதலில், இருபது பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

சமாதான முயற்சிகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் நேரத்தில், இத்தகைய சம்பவங்கள் நடைபெறுவது கண்டனத்திற்குரிய விடயம் என, விடுதலைப் புலிகள் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளதாக யாழ். செய்திகள் தெரிவிக்கின்றன. ■

**குறிப்பு**
**தமிழீழ உட்கட்டுமானம் எதிர்வரும் செய்தித்தாளில் தொடரும்.**

# தமிழ் மக்களையும்...

இவ்வாறு புதிய பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

"தங்களின் சமாதான முன்னெடுப்பு வெற்றியளிக்க, சிங்கள இனவாதிகள் அனுமதிப்பார்களா?" என யாழ். ஆயர் கேட்டதற்கே புதிய பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பிரதமர் கருத்துத் தெரிவிக்கையில், "சமாதான முயற்சிகளின் அவசியம் பற்றியும், யுத்தத்தினால் இலாபம் இல்லை என்பது பற்றியும் தாம் சிங்கள மக்கள் மத்தியில், தேவையான இடங்களில் தேவையான விளக்கங்களைக் கொடுத்து, வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் அவர், பல இடங்களில் மக்கள் மத்தியில் தாம் உரையாற்றும்போது, சமாதானத் தீர்வைநோக்கி விடுதலைப் புலிகளுடன் நேரில் சென்று பேசப் போகின்றேன் எனத் தெரிவித்ததும், அமோக வரவேற்புக் காணப்பட்டதாகவும், மக்களில் பெரும்பகுதியினர் சமாதானத்தையே விரும்புவதாகவும், தான் முன்னின்று அதைச் செயற்படுத்தப் போவதாகவும் யாழ். ஆயரிடம் தெரிவித்துள்ளார். ■

# பாதுகாப்பு...

வைச்சுக் கொண்டு கிடந்திருந்தால்.... எனக்கு நினைச்சுப் பார்க்கவே என்னவோ செய்யுதப்பா"

என்று அவன் கூறவும், அவளது கைகளுக்குள் சுருண்டு கிடந்த குழந்தை தனது கை, கால்களை ஒரு தரம் உதறி அவளை நிலை தடுமாற வைத்தது.

"கொஞ்சம் சிலோ பண்ணுங் கோப்பா"

தமயந்தி சொல்லவும் கால்களை ஊன்றிச் சைக்கிளை நிறுத்தினான் அவளது கணவன். தமயந்தி குழந்தையைத் துவாயினால் போத்திக் கைகளுக்குள் அணைத்துக் கொள்ள முற்பட்டபோது குழந்தை தனது கண்களைத் திறந்து அவளைப் பார்த்துச் சிரித்தது.

"அவருக்குச் சிரிப்பாய்க் கிடக்குது, நாங்கள் அவரைப் பாதுகாத்து வளர்த்தெடுக்கப் படுற பாடு அவருக்கென்ன தெரியுது. அவர் சிரிக்கிறார்"

சொல்லிக் கொண்டே குழந்தையின் உச்சியில் தன் உதடுகளைப் பதிக்கிறாள். மீண்டும் சிரிக்கிறது குழந்தை. ■

# பிறரின் தலையீடில்லாத...

கலந்து கொள்ளவுள்ளனர். அதேவேளை, சிறீலங்கா அரசாங்கம் அதன் மூத்த நிர்வாக உறுப்பினர் லயனல் பெர்ணான்டோ தலைமையில், பிரதம மந்திரியின் செயலாளரான பாலபட்ட பெந்தி, இலங்கை வங்கியின் பணிப்பாளர்களில் ஒருவரான ராஜன் **ஆசிர்வாதம் கட்டடக்கலைஞரான** குணரத்தினா ஆகியோர் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளது.

## இருபிரிவாக அட்டவணை

இச்சுற்றுப் பேச்சுக்களின் போது அன்றாடப் பிரச்சினைகள், அடிப்படைப் பிரச்சினைகள் என்ற இரு பிரிவாக பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரலை வகுத்துக்கொள்ளலாம் என விடுதலைப் புலிகள் தரப்பில் எடுத்துக் கூறப்படுமெனத் தெரிகின்றது.

அத்துடன், சிறீலங்காவின் உயர் மட்டக்குழு சிறீலங்காவின் பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா தலைமையில், பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்காக, யாழ்ப்பாணம் விஜயம் செய்வது தொடர்பான பூர்வாங்க ஆலோசனைகளும், நிகழ்ச்சி நிரல் தயாரிப்பும் இடம்பெறலாம் எனவும் தெரியவருகின்றது.

## இந்திய விஜயங்கள்

இதற்கிடையில் கொழும்புச் செய்திகளின்படி, திரு. லயனல் பெர்ணான்டோவும் சிறீலங்காப் பிரதமர் சந்திரிக்கா பண்டாரநாயக்காவும் தனிப்பட்ட விஜயங்களை இந்தியாவுக்கு மேற்கொண்டு திரும்பியிருப்பதாகத் தெரியவந்துள்ளது. இவற்றுக்கும், பேச்சுவார்த்தைக்கான போக்குகளுக்குமிடையே தொடர்புகள் எதுவும் இல்லையென சிறீலங்கா அரசாங்கப் பேச்சாளர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

## பேச்சுவார்த்தையின் பின்னரே போர் நிறுத்தம்

ஆரம்பப் பேச்சுவார்த்தையின் பின்பே போர்நிறுத்தம் பற்றி, தான் முடிவெடுக்க இருப்பதாக சிறீலங்காப் பிரதமர் சந்திரிகா வெளிநாட்டு முதலீட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசுகையில் கூறியுள்ளமை மற்றொரு குறிப்பிடத்தக்க விடயம் ஆகும். ■

# கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி...

துறைமுகத்தில் நடைபெற்ற கரும்புலித் தாக்குதல், பெரிய வெற்றியை ஈட்டித்தந்தது. கடற்புலிகள் விசேட படையணி மேற்கொண்ட இவ்வெற்றிகரமான தாக்குதலில், சிறீலங்காக் கடற்படைக்குச் சொந்தமான கட்டளையிடும் தலைமைத் தாய்க் கப்பலும், அதிவேக பீரங்கிப் படகான டோறாவும் மூழ்கடிக்கப்பட்டன. பெரும் எண்ணிக்கையான கடற்படையினர் கொல்லப்பட்டனர். சிறீலங்காவிற்குப் பாரிய இழப்பை ஏற்படுத்திய இந்தத் தாக்குதலில், கடற்கரும்புலியான கப்டன் அங்கயற்கண்ணி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இவர் கடற்கரும்புலிகளில் வீரச்சாவடைந்த முதற் பெண் போராளியுமாவார்.

எமது போராட்டத்தின் வளர்ச்சியில், எமது பெண் போராளிகளின் சாதனைகள் ஒப்பற்றவை. உலகே வியக்கும்வண்ணம் எமது பெண் போராளிகள், பல வீரகாவியங்களைப் படைத்துக்கொண்டிருக்கின்றார்கள். எமது மகளிர் படையினரின் ஒரு சகாப்த வளர்ச்சியானது, புதிய பரிமாணங்களில் முன்னேற்றம்கண்டு வருகின்றது. இந்தவகையில், கடற்கரும்புலியான கப்டன் அங்கயற்கண்ணியின் வீரசாதனை எமது போராட்டப் பாதையில், ஒரு புதிய திருப்புமுனையைக் குறித்து நிற்கின்றது. காலம் காலமாக அடிமை இருளில் கட்டுண்டுகிடந்து, மெல்ல மெல்ல முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் தமிழீழப் பெண்ணினத்திற்கு, இந்த வீர சாதனை நம்பிக்கையூட்டும் நிகழ்வாக அமைகிறது. எமது போராட்ட வரலாற்றில், இந்தக் கடற்கரும்புலியின் அற்புதமான அர்ப்பணிப்பு ஒரு மைல் கல்லாக விளங்கும் என்பது திண்ணம்.

இவ்வீரசாதனையை நிகழ்த்தி, வீரச்சாவடைந்த கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணிக்கு எமது வீர அஞ்சலியைச் செலுத்துகின்றவேளையில், எமது விடுதலைப் போரை முன்னெடுக்கும் பணியில், அனைத்துத் தமிழீழப் பெண்களும் பங்களிக்கவேண்டும். ■

# ஐ.நா.பொதுச்சபையில்...

"பயங்கரவாதிகள்" என்ற அடைமொழியை விடுத்து, "பிரிவினைவாதிகள்" என்ற சொற்றொடரை வெளியுறவு அமைச்சர் கையாண்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது என, அவதானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆயினும், இலங்கைத் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு, வடக்கு -கிழக்குப் பிரச்சினை என்ற அர்த்தமற்ற தொடரையே சிறீலங்காவின் புதிய வெளிவிவகார அமைச்சர் கையாண்டுள்ளமை, ஆரோக்கியமான வளர்ச்சி அல்ல எனவும், சிறீலங்கா அரசாங்கம் அரசியல் யதார்த்தம், பிரச்சினையின் ஆழமும், அகலமும் என்பவைபற்றி மேலும் ஆழமாகக் கண்ணோட்டம் செலுத்தவேண்டிய நேரம் இது எனவும், இலண்டன் அரசியல் விஞ்ஞான மாணவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சுவிற்சர்லாந்தில்
ஈழநாதம் வானொலி தமிழ்ச்சேவை
பிரதி வெள்ளிதோறும் பி.ப. 3 மணி
தொடக்கம் 4 மணி வரை FM 104.5 Mhz
அலைவரிசையில்
ஒலிபரப்பப்படுகின்றது.

# இரு தரப்பு பேச்சு...

தனிமனித சுதந்திரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் பாணியில் செயற்படுவதின், சர்வதேசக்காரணி ஆகும். "அத்துடன், தனிமனித சுதந்திரத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தால், சமூக இயைபான விடுதலை உணர்வு தளர்வுறும்" எனும் மேற்கத்திய தத்துவம் இலங்கையிலும் செயல் உருப்பெறக்கூடும் என்ற, பகற்கனவும் புதிய அரசாங்கத்துக்கு இருக்கலாம். ஆகவே, புதிய அரசாங்கம் தனது பொருண்மிய, சர்வதேச நிதி உதவி தேடல் பின்னணியில் மனித உரிமைகள், உள்நாட்டு யுத்தப் பிரச்சினைகள் என்பவற்றை அணுகுகின்றதா அல்லது 'தமிழர் பிரச்சினை' என்பதின் ஆழமான வடிவத்தை உணர்ந்து இயங்குகின்றதா என்பது காலத்தோடு வெளிப்படவேண்டிய ஒன்றாக நிற்கின்றது.

இந்நிலையில், மீளவும் 'பேச்சுவார்த்தை' என்று கூறுகையில், தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்புக்குப் பொறுப்பான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சில முக்கியமான பங்குகளை வெளிப்படுத்தவேண்டிய கடமை உள்ளது.

முதலில், தற்பொழுது, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழீழத்தின் மீட்கப்பட்ட பகுதி என்று ஒன்று உண்டு என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். இதில் விடுதலைப் புலிகளின் அரசு ஒன்று நடைபெற்று வருகின்றது. ஆங்கிலத்தில் De Facto என்றால், (In Fact) உண்மையில் என்று அர்த்தம். ஒரு நாட்டினம் தன்னைத் தானே ஆளுகின்ற நிலைக்கு வந்து, அதேவேளை சர்வதேச நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறாதநிலையில் அது இருக்குமானால், அதனை 'அரசுநோக்கிய அரசு' (De Facto) என அழைப்பர். இந்த அரசுநோக்கிய அரசு படிப்படியாக சட்டரீதியான அரசாக மாறுவதை 'De Jure' என ஆங்கிலத்தில். அழைப்பர். இன்று தமிழீழத்தின் மீட்கப்பட்ட பகுதிகளில் இயங்குகின்ற அரசும், இந்தநிலையை அடைந்து கொண்டிருக்கின்றது. இதற்கு மக்கள் தங்களை அர்ப்பணித்த நிலை காணப்படும். இதனை தேசநிர்மானப்போக்கு (Nation Building Process) எனக்கூறுவர். இது உலக மக்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது.

### இருதரப்பு பேச்சுக்கள் சலுகைக்கான பேச்சுக்கள் அல்ல

எனவே, இப்பண்புகளைக் காப்பாற்றவேண்டிய நிலையில், சிறீலங்கா அரசாங்கத்துடன், விடுதலைப் புலிகள் நடாத்தக்கூடிய எந்தப் பேச்சுவார்த்தையும் 'Talk With' என்ற பாணியிலான பேச்சுவார்த்தையாகவே அமையும். அத்துடன், இப்பேச்சுவார்த்தை இருதரப்புக்குமிடையே விட்டுக்கொடுத்தல்களை நாடிநிற்கும். ஆகவே, இங்கு இருபக்கமும் வாக்குறுதிகளை வழங்கவும், வாக்குறுதிகளைச் செயற்படுத்தவும் வேண்டிய கடமையும், தேவையும் உண்டு. இதனால், இப்பொழுது நடைபெறக்கூடிய எந்தப் பேச்சுவார்த்தையும் 'இருதரப்பு' (Bi-lateral) பேச்சுவார்த்தையாகவே இருக்கும். ஆகவே, இது முன்புபோல் சலுகைகள் தேடும் பேச்சுக்கள் அல்ல. இரு நாட்டினங்களின் பிரதிநிதிகளுக்கிடையே, தங்கள் நாட்டினங்களின் விடயங்கள் சம்பந்தமாக நடக்க இருக்கும் பேச்சு.

இப்பேச்சுவார்த்தையின் போது, முடிவுகள் எடுக்கப்படும் வரை, ஒவ்வொரு கட்டத்திலும் வழமையானநிலை தொடரும். உதாரணமாகப் போர் நிறுத்தம் என்பது எய்தப்படும்வரை, போர் தொடரலாம். அப்போரின் விளைவுகள் பேச்சுவார்த்தையைப் பாதிக்கின்றது என, யாராலும் கூற முடியாது. அவ்வாறே, இப்பேச்சுவார்த்தையை உருவாக்குவதற்கான முன்னோடி நடவடிக்கைகளிலும் 'இருதரப்பு' பங்களிப்பு இருக்கும். உதாரணமாக சிறீலங்காப் பிரதமர் சந்திரிகா, பொருண்மியத்தடையில் சிலவற்றைத் தளர்த்தியதும், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன், யுத்தக் கைதிகளில் சிலரை விடுதலை செய்தார். அத்துடன் இப்பேச்சுவார்த்தைகளில், ஒரு ஒழுங்குமுறை இருக்கும். உதாரணமாக சிறீலங்காவின் நிர்வாக அலுவலர்கள், சிறீலங்காவின் பிரதிநிதிகளாகப் பேச்சுவார்த்தையில் இறங்கினால், அவர்களுக்குச் சமானமான தமிழீழ நிர்வாக அலுவலர்கள் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வர்.

எனவே, இத்தகைய பேச்சுவார்த்தைகளும் ஒரு நாட்டின் தேசநிர்மாணப்போக்கில் ஏற்படும் இயல்பான வளர்ச்சிகளே, இப்பேச்சுவார்த்தைகள், மூலம் இருநாட்டினதும் சட்டரீதியான இருக்கைநிலைகள் மேலும் தெளிவாகும்.

இப்பொழுது ஏன் சிறீலங்காப் பிரதமரிடம், 'தடைகளை எடுங்கள்' போன்ற வேண்டுகோள்களை விடுதலைப் புலிகள் விடுக்கவேண்டும்; இது தமிழீழ அரச்நோக்கிய அரசைப் பாதிப்படையச் செய்யவில்லையா? என்று ஒருவர் கேட்கலாம். உண்மையில் இப்படிக்கேட்பதன் மூலம், சிறீலங்காவின் ஆக்கிரமிப்புத்தன்மைதான் வெளிப்படுகின்றது. எமது அரசுநோக்கிய அரசை இராணுவ படைப்பலத்தினால், வலுக்கட்டாய ஆக்கிரமிப்புச் செய்யாமல் சிறீலங்கா இருக்குமானால், தமிழீழ அரசுக்கு உள்நாட்டில் உள்ள மூலவளங்களைப் பயன்படுத்துவதினாலும், சர்வதேசரீதியான பொருண்மிய ஒழுங்குமுறைகளில் பங்கெடுப்பதினாலும் தனது மக்களுக்கு சமாதானவாழ்வை வழங்க முடியும். ஆனால், இதனை ஆக்கிரமிப்பாளரான சிறீலங்கா தடுத்து நிற்பதினால், அது ஏற்படுத்தும் தடைகளை அகற்றும்படி, சிறீலங்காவிடம் கேட்பது, வேண்டுகோள் அல்ல; நியாயமான நிபந்தனை என்பதை விளங்கிக்கொள்ளல் அவசியம். அதனால்தான், பேச்சுவார்த்தைக்கான பிரச்சினைகளை 1. அன்றாடப் பிரச்சினைகள் 2. அடிப்படைப் பிரச்சினைகள் என இரண்டாகப் பிரித்து, பேச்சுவார்த்தையை நோக்கிச்செல்வதற்கு, அன்றாடப் பிரச்சினைகளைக் கையாள்வது பற்றியும் பேச்சுவார்த்தையின்

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்...

# யேர்மனி
# தியாகி திலீபனின் ஏழாவது ஆண்டு நினைவு நாள்

தமிழர் கலை, பண்பாட்டுக்கழக யேர்மன் கிளையினர் தியாகி திலீபனின் ஏழாவது ஆண்டு நினைவாக கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளையும், கலை நிகழ்ச்சிகளையும் நடாத்தினர்.

01. 10. 1994 அன்று (சனிக்கிழமை) டோட்முன்ட் நகரின் Bruch Str -27 இல் அமைந்துள்ள தமிழாலயத்தில் காலை 8. 00 மணிக்கு 'தியாகி திலீபன் நினைவுப்போட்டி 1994 -ஐ' ஆரம்பித்து நடாத்தினர். நூற்றுக் கணக்கானோர் பங்கு பற்றிய இந்தப் போட்டிகளில் விடுதலை உணர்வு மிக்க ஆக்கங்கள் வெளிக்கொணரப்பட்டன. சிறுவர்களை ஆர்வத்துடன் அழைத்து வந்திருந்த பெற்றோரின் ஈடுபாடு நிறைந்த செயற்பாடுகள், பாராட்டக் கூடியதாக அமைந்திருந்தது.

அதிமேற்பிரிவில் பங்கு பற்றிய போட்டியாளர்களின் ஆக்கங்கள், வெளிநாட்டில் வாழும் தமிழரிடையே தரம்மிக்க பல படைப்பாளர்கள் தோன்றியுள்ளார்கள் என தெரிய வைத்தன.

பி. ப. 5 மணிக்கு MUNSTER STR 138 -140 இல் அமைந்துள்ள ALBRECHT -BRINKMANN -SCHULE மண்டபத்தில், மௌன அஞ்சலியுடன் கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

தியாகி திலீபனை நோக்கிய பிராத்தனையின்போது, "ஆயுதம் தான் பலம் என்று இந்திய வல்லூறு எண்ணிய போது, அகிம்சையின் வலுவைக் காட்டிய வீரனே! இந்திய ஏகாதிபத்தியக் கால்கள், தமிழீழத்தில் வேரூன்ற முனைந்தபோது, அள்ளி எறியப்பட உன் அகிம்சையின் மூச்சுத் தான் புயலானது" என்று கூறப்பட்டது.

போட்டிகளில் வெற்றியீட்டிய போட்டியாளர்களின் ஆக்கங்கள் மேடையேற்றப்பட்டன. கீழ்ப்பிரிவில் பங்கு பற்றி பரிசு பெற்ற உமா என்ற சிறுமி, "உங்களை நான் ஒரு கேள்வி கேட்கிறேன்!, சிங்கள ஏகாதிபத்தியத்தின் கொடுமைகளால் ஈழத்தமிழர் படும் வேதனையின் ஓலம் உங்கள் காதுகளில் கேட்கவில்லையா?" என்று மழலை மொழியில் உணர்ச்சிப் பெருக்கோடு கேட்டபோது, மண்டபமே ஆரவாரித்து கரகோசமிட்டு அந்தக் குழந்தைப் பேச்சாளரை உற்சாகமூட்டியது.



"சுஜீதா! ஒரு விடுதலை உணர்வின் தொகுப்பு" என்ற ஒளி இழைப்பேழையை வெளியிட்டு வைத்த தமிழர் கலை, பண்பாட்டுக்கழக யேர்மன் கிளைப் பொறுப்பாளர் பேசும் போது, "திலீபனின் முதலாவது நினைவு நாளின் போது, மேடையேறி திலீபனின் புகழ் பாடிய சுஜீதா என்ற பூங்குயில், பலகலைகளைப் பயின்று கலைத் தோகையை விரித்து நடனமாடிய மயில், தனது கலை வெளிப்பாடுகள் அனைத்தையும் தமிழீழ விடுதலைக்கு மட்டுமே என வாழ்ந்த ஒரு உன்னத கலைஞர். இந்த சின்னஞ்சிறு கலைஞர் வாழ்ந்த காலத்திலும் சரி மறைந்துவிட்ட பின்பும்சரி தமிழீழ மக்களை விடுதலையின் பக்கம் ஈர்த்தபடியே இருக்கின்றார்" என்று குறிப்பிட்டார். முதற்பிரதியை கலை, பண்பாட்டுக் கழக யேர்மன் கிளைச் செயலாளர் வாங்கினார்.

இதனை அடுத்து, 'திலீபன் காதை' என்ற வில்லிசையும், கர்நாடக சங்கீத கச்சேரியும், 'திலீப தீபம்' என்ற இசை நடனமும் நடைபெற்றன. கலை, பண்பாட்டுக்கழக கலைஞர்களின் படைப்பான இந்தக் கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் விடுதலைக்கு திலீபன் செய்த சேவையையும், தியாகத்தையும் வெளிப்படுத்தின.

மண்டபமே நிறைந்து, மண்டபத்துக்கு வெளியேயும் நின்று இந்த உணர்ச்சிப் பிழம்பான கலை நிகழ்ச்சியைப் பார்த்தும் கேட்டும் விடுதலை உணர்வோடு திலீபனை நினைவு கூர்ந்த தமிழ்மக்கள் அனைவரும், "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற தாரக மந்திரத்தை உச்சரிக்க நினைவுநாள் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

காலை 8. 00 மணியில் இருந்து, இரவு 10. 00 மணிவரை நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகளில், ஆர்வத்தோடு கலந்துகொண்ட தமிழீழ மக்களின் மனதில், 'விடுதலைக்காக உயிர்துறப்பவர்கள், புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகிறார்கள்' என்பதற்கேற்ப விதைக்கப்பட்ட திலீபன் உயிர்த்து, தளிர்த்து வாழ்கிறார் என்பது புலப்பட்டது. ■

ஐரோப்பாவில் வெற்றிநடை போடும்...
தமிழீழத் திரைப்படங்கள்
வீர மறவர்தம் ஒப்பற்ற தியாகமதை
நம் மண்ணின் நிகழ்வுகளை...
நம் மக்களின் பங்களிப்பை...
திரைக்காவியமாய் படைத்தளிக்கும்
தமிழீழக் கலைஞர்களின்...

உயிராயுதம்
காற்றுவெளி
மண்ணுக்காக...
ஒளி படைத்த கண்
மண்பற்று
மேலதிக விபரங்களுக்கு :-
நீங்கள் வாழும் நாடுகளில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின்
அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

www.tamilarangam.net



# தேசியத் தலைவரின் வழிகாட்டலில் புதிய பரிமாணம் பெறும் கடற்புலிகள்

## - கடற்புலிகள் சிறப்புத் தளபதி சூசை

"எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலில், கடற்புலிகள் ஒரு புதிய பரிணாமத்தைப் பெறுகின்றார்கள். பல புதிய தொழில்நுட்பங்களை உபயோகித்துப் படகைச் செலுத்தக்கூடிய நிலை இன்று உருவாகியுள்ளது".

இவ்வாறு கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை அவர்கள் அண்மையில் யாழ். பல்கலைக் கழக கைலாசபதிக் கலையரங்கில் இடம்பெற்ற 'கடலிலே காவியம் படைப்போம்' என்ற ஒலிப்பதிவுநாடா வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு, பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து அங்கு பேசும்போது,

"1984 ஆம் ஆண்டிலிருந்துதான் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளாகிய நாங்கள் எமக்கென ஒரு சொந்தப் படகை எடுத்து, அதில் பயணம் செய்ய ஆரம்பித்தோம்.



கடற் கரும்புலி கப்டன் அங்கையற்கண்ணி தாக்கி அழித்த, சிறீலங்கா கடற்படைக்குச் சொந்தமான தாய்க் கப்பலின் மாதிரித் தோற்றம் மக்கள் பார்வைக்காக...

ஆனால், 1976 ஆம் ஆண்டிலிருந்து தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களையும், எமது முன்னாள்த் தளபதிகளையும் கடலோடிகள்தான் ஏற்றிக் கொண்டு சென்றார்கள்.

இவர்கள் 1976 ஆம் ஆண்டிலிருந்து சகல நடவடிக்கைகளிலும் பங்கெடுத்து, படகோட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் வளர்ச்சிக்கும் வழிகோலியவர்கள்.

இன்று எமது கடற்பரப்பில், சிறீலங்காக் கடற்படையால் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அண்மையில்கூட பருத்தித்துறைக் கடற்பரப்பில், சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினுடைய பாதுகாப்பு வலயத்திற்குள் அதாவது -பருத்தித்துறையில் கப்பல் தரித்துநின்று, உணவுப் பொருட்களை இறக்கிக்கொண்டிருந்த வேளையிலும்கூட, சிறீலங்காக் கடற்படை உள்நுழைந்து, ஒரு மீனவரைக் கைது செய்து, மற்றொருவரைப் பீரங்கியினால் சுட்டுக்கொன்றுள்ளது.

இத்தகைய நிகழ்வு இன்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதுபோன்று, கிழக்கிலும் பல நிகழ்வுகள் நாளாந்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தநிலையில், ஏராளமான தமிழ் மக்கள் இந்தக் கடல்நீரேரியிலும், இந்தக் கடலிலும் இறந்துகொண்டிருக்கின்றார்கள். இவர்களுடைய அவலங்களைத் தாங்கி இருப்பவர்களுக்குச் சமர்ப்பணமாகத்தான் இந்த ஒலிப்பதிவுநாடா விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினால் உருவாக்கம்பெற்று, இன்று உங்களுக்காகத் தரப்படுகின்றது.

1984 ஆம் ஆண்டு புத்தாண்டு நாளன்று, யாழ். கோட்டை பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலில், காயமடைந்த போராளிகளை இந்தியாவிற்கு சிகிச்சைக்காகக்கொண்டு செல்லவேண்டியநிலை; அத்தகைய சூழ்நிலையில் மனைவியையோ தன்னுடைய பிள்ளைகளையோ கருத்திற்கொள்ளாமல், அன்று வடமராட்சி கிழக்கில் உடுத்துறைப் பகுதியில் இருந்து, காயமடைந்த போராளிகளையும் பயிற்சிக்குரிய போராளிகளையும் அழைத்துச் சென்றவர்தான், கடலோடிய கணேஸ்மாமா. அந்தப் பயணத்தைத் தொடர்ந்த வேளையில், சிறீலங்காக் கடற்படையால் அவர்களுடைய படகு நிர்மூலமாக்கப்பட்டது. அந்த நிகழ்வில் சில கடலோடிகளும், கடலோடிகளுக்குப் பக்கபலமாக இருந்த கடற்புலிகளும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்கள்.

இப்பாடல்கள், மூன்று மாதகாலத்திற்கு முன்னரே உருவாக்கப்பட்டன. இந்த ஒலிப்பதிவுநாடாவை வெளியிடும்போது, அந்தப் பாடலில், கூடுதலான கருத்துக்கள் கடலிலேயே காவியம் படைப்போம்; எதிரியை முறியடிப்போம், என்ற பதங்களை உள்ளடக்கியிருந்ததினால், ஒரு வரலாற்றுச் சாதனையின் பின்னர்தான், இந்தப்பாடல் ஒலிப்பதிவுநாடா வெளியில் வரவேண்டும் என்பது எமது தலைவரின் அவா! இன்று அந்த வரலாற்றுச் சாதனையைப் படைத்து, வீரகாவியம் படைத்தார், மகளிர் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி. அவருடைய மகத்தான சாதனையை அடுத்துத்தான், இன்று உங்களுக்காக உங்கள் கைகளில் தவழவிடப்படுகின்றது.

தலைவரின் சிந்தனையில் உதித்ததுதான், கரும்புலிகள் கடல்நீரேரியில் பயன்படுத்திய குருவிப்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்...

# கடற்புலிகள் ஒலிநாடா வெளியிடப்பட்டது

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் வெளியீடான, விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய 'கடலிலே காவியம் படைப்போம்' பாடல் ஒலிப்பதிவுநாடா அண்மையில், யாழ். கைலாசபதி கலையரங்கத்தில் வெளியிடப்பட்டது.

கடற்புலிகள் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி நளாயினி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர், திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டு வைக்க, முதன்முதலாக கடற்படையின் தாக்குதலில், 1984 ஆம் ஆண்டு புத்தாண்டு நாளன்று கடலில் வீரச்சாவடைந்த கணேஸ் மாமாவின் மனைவி அவர்களும், கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் அவர்களும் ஒலிப்பதிவுநாடாவைப் பெற்றுக்கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் சிறப்புத் தளபதி திரு. சூசை அவர்கள் அங்கு உரையாற்றினார். பின்னர் இந்த ஒலிப்பதிவுநாடா உருவாக்கத்தில் ஈடுபட்ட கலைஞர்களுக்கு பரிசு வழங்கிக் கௌரவித்தார்.



கடலிலே காவியம் படைப்போம் ஒலி நாடாவின் முதற்பிரதியை அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனிடமிருந்து வீரச்சாவடைந்த கணேஸ் மாமாவின் மனைவி பெற்றுக் கொள்கிறார்.

திரு. வீரமணிஐயர், பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் மதிப்பீட்டுரை ஆற்றியதையடுத்து, மு. வே. யோ. வாஞ்சிநாதன் அவர்கள் நன்றி உரையாற்றினார்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் பத்தாவது வெளியீடான இது, கணனியின் உதவியுடன் ஒலிப்பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ■

# கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் வீரசாதனை எமது போராட்டத்தின் ஒரு திருப்புமுனை

## விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு அறிவிப்பு

"எமது மகளிர் படையணியினரின் ஒரு சகாப்த வளர்ச்சியானது, புதிய பரிமாணங்களில் முன்னேற்றங்கண்டுவருகின்றது. இந்தவகையில், கடற்கரும்புலியான கப்டன் அங்கயற்கண்ணியின் வீரசாதனை எமது போராட்டப் பாதையில், ஒரு புதிய திருப்புமுனையைக் குறித்து நிற்கின்றது. காலம் காலமாக அடிமை இருளில் கட்டுண்டுகிடந்து, மெல்ல மெல்ல முன்னேற்றப் பாதையில், சென்றுகொண்டிருக்கும் தமிழீழப் பெண்ணினத்திற்கு இந்த வீரசாதனை நம்பிக்கையூட்டும் நிகழ்வாக அமைகின்றது".

இவ்வாறு முதற் பெண்கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணிக்கு வீர அஞ்சலி செலுத்தி, விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடற் கரும்புலி கப்டன். அங்கயற்கண்ணி

அவ்வறிக்கையின் முழுவிபரமும் வருமாறு:

எமது விடுதலைப் போராட்டம் ஒப்பற்ற வீரவரலாறுகளைப் படைத்துக்கொண்டிருக்கின்றது. விடுதலைக்கான எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்தில் இருந்தே பிறக்கின்றது. எண்ணற்ற தியாகங்களும், அர்ப்பணிப்புக்களும் நிறைந்த எமது விடுதலைப் போராட்டத்தில், ஒரு புதிய அத்தியாயமாகக் கரும்புலிகள் விளங்குகின்றார்கள். எதிரியின் வலிமைமிக்க படைப்பலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் ஒப்பற்ற தியாகிகளாகக் கரும்புலிகள் இருக்கின்றார்கள். எமது போராட்டத்திற்குப் பெரிய வெற்றிகளைத் தந்துவிட்டு, தம்மையே உயிராயுதமாக்கி, உரு அழிந்துபோன கரும்புலிகளின் அர்ப்பணிப்புக்கள் சொல்லிலடக்க முடியாதவை.

இந்த வரலாற்றில், 16. 08. 1994 அன்று காங்கேசன்துறைத்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

கரும்புலியாகிய கடற்புலித் துணிவே!
கால நதி நீரில்... கரையாத நினைவே!
எதிரியின் பெரும்படைக் கப்பலை எரித்தாய்
எங்களின் தாயகப் பெருமையை விரித்தாய்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இலண்டனில், தமிழீழத் தேசிய உணர்வுக்கு உரமூட்டிய
# எழுச்சிக் கானங்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் (பிரித்தானியக் கிளை) கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் 24. 09. 1994 சனிக்கிழமையன்று, வெம்பிளியிலுள்ள 'பிறண்ட்' நகர மண்டபத்தில், இந்த 'எழுச்சிக் கானங்கள்' என்னும் கலை நிகழ்வு மிகவும் எழுச்சிகரமாக நடாத்தப்பட்டது. கலையரங்கின் ஒரு முனையில், தீபங்கள் ஏற்றப்பட்டு -மலர்கள் தூவப்பட்டிருக்க, அதன் மத்தியில் லெப். கேணல் திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. இக்காட்சியானது, திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை (26. 09. 1994) மனதில் நிலைநிறுத்தியதுடன், இந்திய ஆக்கிரமிப்பின் கொடூர நினைவுகளை மீண்டுமொருமுறை சுமக்கவைத்தது. மறுமுனையில், மின் அலங்காரத்துடன் வடிவமைக்கப்பட்ட தமிழீழத் தேசப்படம், எமது தேசியச் சின்னமாகிய புலித்தலையை மையத்தில்கொண்டு அழகாகக் காட்சியளித்தது. இந் நிகழ்வில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். மாலை 6. 30 மணியளவில் ஆரம்பித்து, இரவு 11 மணிவரை நடைபெற்ற இந்நிகழ்வின் தொடக்கத்தில், தமிழீழ விடுதலைக்காய் வித்தான போராளிகளுக்கும், பொதுமக்களுக்குமாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. விடுதலைப் புலிகளின் பிரித்தானியக் கிளை கலை, பண்பாட்டுக் கழகம் சார்பில் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது.

வரவேற்புரையைத் தொடர்ந்து, ஏழு கலைஞர்கள் வாத்திய இசை முழங்க, 'ஆதியாய் அநாதியாய்...' என்னும் எழுச்சிப் பாடலுடன் ஆரம்பமான இந்த இசை நிகழ்வு, 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்...' என்ற பாடல்வரை நீண்டு சென்றது. இந்த நிகழ்வில் 20 பாடகர்கள் கலந்துகொண்டனர். சில பாடல்கள் இசைக்கப்பட்டபின், இடைவேளைக்கு முன்பாக கவிஞர் காசி ஆனந்தன், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், புலவர் சிவநாதன் ஆகியோரால் இயற்றப்பட்டு, தேனிசைச் செல்லப்பா அவர்கள் இசைவடிவம் கொடுக்க யாழ். சீலன் அவர்களால் பின்னணி இசை வழங்கப்பட்டு, தமிழீழத்தவர்களுக்காய்த் தமிழர்கள் வாழும் இடமெங்கும் தொடர்ந்து இசைக்குரல் எழுப்பிவரும், அண்ணன் தேனிசைச் செல்லப்பாவுடன், மகள் சாந்தி செல்லப்பாவினாலும் இசைக்கப்பட்ட எழுச்சிப் பாடல்களைக் கொண்ட, 'விடுதலைப் போர் முரசு' என்னும் ஒலியிசைத்தட்டு (சீ. டி.) ஒன்றும் வெளியிடப்பட்டது. இதனை விடுதலைப் புலிகளின் பிரித்தானியக் கிளைப் பொறுப்பாளர் திரு. சாந்தன் அவர்கள் வெளியிட்டுவைக்க, அதன் முதற்பிரதியை யாழ். சீலன் அண்ணன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.






இடைவேளைக்குப்பின் எழுந்த சில கானங்களைத் தொடர்ந்து, தமிழீழ புனர்நிர்மான நிதிக்காக விற்பனைசெய்யப்பட்ட நல்வாய்ப் புத்துண்டுகள் (அதிஸ்டலாபச்சீட்டுக்கள்) நல்வாய்ப்புப் பார்க்கப்பட்டு, மூவர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதனைத்தொடர்ந்து, எழுந்த கானங்களுக்கிடையில், இசை வழங்கிய கலைஞர்கள் யாவரும் நிகழ்ச்சி அறிவிப்பாளர்களால், அறிமுகம்செய்து, வைக்கப்பட்டனர். முழு நிகழ்ச்சிக்குமாக மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சகோதரி உட்பட மூவர் அறிவிப்பாளர்களாகப் பங்கெடுத்துக்கொண்டனர். எழுச்சிக் கானங்கள் அள்ளிவீசிய புரட்சிவரிகள் ஒருபுறமும், அறிவிப்பாளர்கள் அள்ளிவழங்கிய ஆழமான கருத்துடைய எழுச்சி வசனங்கள் மறுபுறமுமாக, மண்டபம் எங்கும் தமிழீழ விடுதலைக்கான உணர்வுகளைச் சிந்தச் செய்தன.

எழுச்சிப்பாடல்கள் யாவும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தேவையினையும், விடுதலையை முன்னெடுக்கும் மண்ணின் நிகழ்வுகளையும் எமது வருங்காலச் சந்ததிகளின் சுபீட்சமான, சுதந்திரமான வாழ்வுக்காக எம்வீரமறவர்கள் செய்த - செய்துவரும் தியாகங்களையும் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்திநின்றன. எம்மண்ணில் உரத்து எழுந்த, உணர்ச்சிவரிகளைக் கொண்டு எழுந்த கானங்கள், சுதந்திரத்தின் தேவையைப் பார்வையாளர் மனங்களில் ஆழப்பதிப்பனவாக அமைந்தன. பாடல்கள் யாவும் பெரும் உணர்வலைகளை ஏற்படுத்தியமைக்கு, மண்டபத்தில் எழுந்த கரகோசங்களும் ஒரு சான்றாக விளங்கின. கரகோசங்களைத் தவிர்ந்த முழுநேரமும் பார்வையாளர் மத்தியில் பெரும் அமைதி காணப்பட்டது. கானங்கள் சுமந்துவந்த புரட்சிவரிகள் ஒவ்வொன்றும் பார்வையாளர்களைத் தமிழீழ விடுதலை உணர்வில் மூழ்கவைத்தமையே பெரும் அமைதிக்குக்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்...


TAMIL EELAM

## இங்கிலாந்து

இலண்டன்

081 - 503 4305 (3 இணைப்புகள்)
0891 - 919310 (50 இணைப்புகள்)
(39 p/minute during non peak hours)
(49 p/minute during peak hours)
081 - 503 4307 (English)

## டென்மார்க்

கொப்பனேகன்
55 - 776009
வைபன்
62 - 613781
ஜைலான்ட்
97 - 840385

## நோர்வே

Oslo 22 - 190037
Bergen 55 - 318796
Trondheim 725 - 91191
Sogn Og Fjordane 57 - 749364
North Norway 789 - 87391
Stavanger 515 - 70474
Molde 712 - 51768

## யேர்மனி

Dortmund 0231 - 416634
Bremen 0421 - 6165463
Munchen 089 - 7212903
Nurenberg 0911 - 311668
Hannover 0511 - 8790957
Saarbrucken 0681 - 684636
Neuss 02131 - 120395
Bielefeld 0521 - 200720
Hamburg 040 - 4307629
Munster 0251 - 786943
Stuttgart 0711 - 246554
Maikammar 06321 - 57194
Hailbron 07136 - 4170
Frankfurt 069 - 4691367
Berlin 030 - 6885284
Bonn 0228 - 692333

## பிரான்ஸ்

46 36 49 49
30 32 32 26



## சுவிஸ்

Winterthur 052 - 2427229
Bern 031 - 9913862
Burgdorf 034 - 530065
Basel 061 - 3210289
Zurich 01 - 2731804/ 4514489
Solothun 065 - 254819
Lausanne 021 - 3111282
Luzern 041 - 551729
Lugano 091 - 56884
Wattwil 074 - 76527
Chur 081 - 226093

## இத்தாலி

ஜெனோவா 010 - 281655
றப்பாலோ 0185 - 230097
நாப்போலி 081 - 40113859
கத்தானியா 095 - 7513247
பலெர்மோ 091 - 582481/ 583553

## நெதர்லாந்து

டென்காக்
070 - 3840617
ஸ்காகன்
02240 - 14517

## அவுஸ்திரேலியா

மெல்போர்ண்
1900 - 937626
சிட்னி
869 - 0340

விடுதலைப் புலிகளின் அனைத்துலக செய்திச்சேவைகள்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

www.tamilarangam.net

# கடற் கரும்புலி லெப்.கேணல் நளாயினி

## எம் வருங்காலச் சந்ததிக்கு விட்டுச்சென்ற புரட்சி வரிகள்

கற்பிட்டிக் கடலில், சிறீலங்காவின் கடற்படைக் கப்பலை மூழ்கடித்த தாக்குதலுக்குத் தலைமை தாங்கிய கடற் கரும்புலி லெப்.கேணல் நளாயினி அவர்கள், இலண்டனில் வதியும் சகோதரியின் மகனுக்கு, தனது இலட்சியக் கனவுகளை புரட்சி வரிகளாக்கி எழுதிய கடிதமே இது.




### வேங்கைகளின் வேர்வை வீழ்ந்த கடல்!

காற்று வரும்
அலைகளின் மேனி தடவி
காற்று வரும் -
கடலின் செய்தி சொல்லு
எதிரியின் நடமாட்டத்தை
எரிச்சலுடன் சொல்லும்...
புலிகளின் பயணத்தை
புன்னகையுடன் சொல்லும்!
நீலமாய் விரிந்து
நீளமாய் மிதக்கும்
இந்தக் கடல்
தமிழன் கடல்
தமிழன் நீந்திய
தண்ணீர் இது.
தமிழன் இரத்தம் கலந்த
சமுத்திரம் இது.
என்ன நினைத்துக் கொள்கிறாய்
எதிரியே...
எங்களின் கடலில்
நீ என்ன செய்கின்றாய்?
சோழனுக்குப் பின்
கடலுக்கென
சொந்தப்படை வைத்திருக்கும்
வேங்கைகளின் வேர்வை
வீழ்ந்த கடல் இது
உலகத்தின் கதவைத் தட்டி
ஈழத்தின் விடுதலையைச்
சொல்ல
எழுந்தவர் நாங்கள்...
எதிரியே...
அலைக் கரங்களில் தவழும்
நுரைப் பூக்களை
அளையவும் எமக்கேதான்
உரிமை உண்டு.
படகு செலுத்தவும்
கடலில்
புலிக் கொடி கட்டவும்
எமக்கே உரிமை உண்டு
நீலக் கடலில் முத்தாக
எமது புலி வீரர்...
ஓடிவிடு எதிரியே
ஓடாவிடில் உயிரை பறிக்க
வேங்கைகள் வருவர்!

**தமிழீழத்திலிருந்து**
**- கோகுலன்**

U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்